# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு சித்திரை மாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 15-ம் இலக்கம்

# கத்தோலிக்க தொழிலாளரே எழுமின்!

## தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் சுபநாளைக் கொண்டாடுவோம் எழுமின்!!

மேமாதம் — அதாவது வைகாசி மாதம் மரியாயின் மாதமாக எப்போதுமே கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், 1955-ம்ஆண்டுமுதல் மேமாதத்தின் முதலாம்நாள் தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் திருநாளைக்கொண்டாடும் சுபதினமாகப் பரமபதம் அடைந்த 12-ம்பத்திநாதபாப்பானவராலே பிரகடனஞ்செய்யப்படலாயிற்று. கம்யூனிஸ்தர்களும், சோஷலிஸ்தர்களுமான சமதர்மவாதிகள் தங்களது வகுப்புவாத போராட்டங்களைப் பெரும்அட்டகாசங்கள், ஊர்வலங்கள், ஆரவாரங்களுடன் பகிரங்கமாக காட்டிக்கொள்ளும் நாளாக இந்தமேதினத்தை— அதாவது தொழிற்பெருநாளை ஆக்கிக்கொண்டார்கள்.

அதனால், கத்தோலிக்கதொழிலாளர்கள் பரலோகஇராசாவான நமதுஆண்டவரை — தாம் மனுஷாவதாரஞ்செய்யத் திருவுளமானபோது செசார்மன்னர்களின் அரண்மனை அல்ல, ஆனால், ஓர்தச்சனின்குடிசையே அதிகம் நலமானதெனத் தெரிந்து கொண்ட நமதுஆண்டவரை — வளர்த்ததிருக்கைத்தாதையையே தங்கள்மாதிரிகையாகவும், பாதுகாவலராகவும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டார்கள். அர்ச். சூசையப்பர் திருக்குடும்பத்தின் தலைவர். அவர்களைத் தாபரிப்பதற்காகக் கஷ்டப்பட்டு உழைத்து வந்தவர். அவருக்கு உழைப்பென்பதும், வேலையென்பதும் நமக்குப்போல ஆதாமுக்கு இடப்பட்ட சாபத்திடாய் மாத்திரமல்ல, ஆனால், தம்மை அறிந்துகொள்வதற்கும், தம்மைப் பரிசுத்தப்படுத்துவதற்கும் ஏதுவாயுமிருந்தன.

அர்ச். சூசையப்பர் ஓர்தொழிலாளியாயிருந்தார். அதிகம் சரிவரச்சொல்லுகில் மரத்தொழிலாளியா யிருந்தார். மரம்என்பது மனிதனுடன் என்றைக்கும் சம்பந்தப்பட்டதாய் இருந்துவருகிறது. ஓர்மரத்தாலே மனிதவர்க்கம் வீழ்ச்சியடைந்தது. ஓர் மரத்திலே அது இரட்சிக்கப்பட்டது. கிறீஸ்துநாதரின் பூலோக பரிபாலகர் ஓர்தச்சுத்தொழிலாளியாவர். தச்சுத்தொழிலாளி




நாகரீகத்தின் நிர்மாணசிற்பியாவர். மக்களுக்குவேண்டிய பானைகள், சட்டிகள், குடங்களை வனையச் சக்கரங்களை அவர்செய்து கொடுத்தார். அவர்கள்யுத்தத்துக்கு இவர்ந்து செல்வதற்கு வேண்டிய தேர்களைச் செய்து கொடுத்தார். அவர்களது இல்லங்களுக்குவேண்டியமுகட்டு வேலைகளைச்செய்துகொடுத்தார். அவர்களின் உழவுதொழிலுக்கு வேண்டிய கலப்பைகளைச் செய்து கொடுத்தார். இந்துக்கள் சிருட்டி கர்த்தாவென வழிபடும் விஸ்வகர்மா ஓர் தச்சரே. கடவுள் உண்டுபண்ணிய பொருட்களை மக்களின் வாழ்க்கைக்குத் தேவைப்படும் ஏதோ ஒருசாதனமாக உருவாக்கிக்கொடுக்கும் மனிதனே தொழிலாளியாவன். இதுவே தொழிலின் மகத்துவத்தை இனிதே புலப்படுத்துவதாகும்.

மேமாதம்1-ந்திகதி இதோவருகின்றது. அன்றுநாமெல்லாம் மூந்தியமுறைகளிற்போன்று மிக ஆடம்பரமாக — இல்லை, முன்னிலும் பன்மடங்கு மகா ஆடம்பரமாகத் தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் திருநாளைக்கொண்டாடுவோம். கத்தோலிக்க தொழிலாளரே எழுமின்! அன்று தொழிலாளருக்கெல்லாம் மகாவிசேஷப்பட்ட ஓர்தினம். அகிலமுழுவதும் பரந்திருக்கும் தொழிலாளரையெல்லாம் நினைவுகூர்ந்து, அவர்கள் எல்லோர்மேலும் தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்தை இரந்து அவர்களின் இகபரநன்மைகளுக்காக மன்றாடுவோம் கத்தோலிக்க தொழிலாளரே எழுமின்!! இன்றையஉலகில் தொழிலாளர்களின் ஆன்மாக்களையிட்டு மாபெரும்போராட்டம் ஒன்று நடந்துகொண்டிருக்கின்றது. அவர்களையெல்லாம் அஞ்ஞான— நாஸ்திக கம்யூனிஸமாகிய தங்களது செங்கொடியின் கீழ் ஒன்று சேர்த்துவிடுமாறு கம்யூனிஸ்தர்களான பொதுவுடைமைவாதிகள் கங்கணங்கட்டிநிற்கின்றார்கள். நமதுஆண்டவரின் பதிலாளியான பரிசுத்தபாப்பரசரோ திருச்சிலுவைக்கொடியின் கீழ் திடசங்கல்பத்துடன்நிற்குமாறு எல்லோரையும் பரிவாய்அழைக்கின்றார். அவர்களெல்லாம் ஓர் தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் தவருதஅடைக்கலத்தை அண்டிப்போகவேண்டுமென ஆசிக்கின்றார். ஓர் தச்சனான அர்ச். சூசையப்பர் உலகில் தச்சனின் குமாரனென்று அழைக்கப்பட்ட தமதுதிருமகனரைமன்றாடித் தம்முடையவல்லபமுள்ள செபங்களால் தொழிலாளருக்கெல்லாம் பேருதவியாய் இருந்துவருவாரென்பதுநிச்சயம்.

அர்ச். சூசையப்பர் தேவனுக்காகவே உழைத்தார். இந்தக் கருத்துடனேயே நாமும்உழைக்க வேண்டும். அவர் தேவன்மேற்கொண்ட நேசத்தினலேயே திருக்குடும்பத்தைத் தாபரித்தார். ஏனெனில், ஒவ்வோர் தொழிலாளிக்கும் தேவசித்தம் அதுவாயிருப்பதுபோல் — மோட்சபேரின்பத்தைஅடைதற்கானவழி அதுவாயிருப்பதுபோல் தாமும் ஓர் தொழிலாளியாயிருப்பதே தேவசித்தமென்றும், மோட்ச பாக்கியத்தை அடைவதற்கான வழி அதுவேயென்றும்கண்டார்.

தொழிலாளர்களுக்குப் பாதுகாவலராக அர்ச். சூசையப்பரை அளித்ததில் பரிசுத்த பாப்பரசர் தொழில்மட்டிலுள்ள கத்தோலிக்க போதனையைத் திரும்பவும் நிலைநாட்டியுள்ளார். ஏனெனில், பாப்பரசர் ஓர்நீதிமானை — ஓர்நீதியான மனுஷரைத் தொழிலாளருக்குக் கொடுத்திருக்கின்றார். நீதியே தொழிலாளி முதலாளி தகராறைத் தீர்ப்பதற்குச் சிறந்த திறவுகோலாகும். நீதியில்லாமல் சமூகதர்மம் எப்படி இருக்கமுடியும்?

ஆகவே, தொழிலாளர்களே, மனோற்சாகத்துடன் எழுங்கள்! எழுந்து உங்கள் முன்மாதிரிகையான அர்ச். சூசையப்பரிடம் செல்லுங்கள்! அவரே உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றார். ஏனெனில், அவரும் உங்களைப்போல ஓர்தொழிலாளி.

# நான் பசியாயிருந்தேன், அப்போது.........

எஸ். ஏ.

போலாந்துதேச வார்சோநகரிலே சப்பாத்துகள் பழுதுபார்ப்பதில் வல்லவனை மாட்டீன் எனும் பெயர்கொண்ட செம்மான்ஒருவன் இருந்தான். இவன்வசித்திருந்து தொழில்பார்த்துவந்த சிற்றறை அந்நகரப்பெருவீதியின் பக்கத்தமைந்துள்ளது. அதன் சிறியசன்னல்வழியாக வெளிவீதியை நோக்குமிடத்து, வீதியிற்செல்வோரின் பாதங்களிலுள்ள சப்பாத்துகளை மாத்திரம் எவருமகாணலாம். மாட்டீன் நெடுங்காலம் அவ்விடம்சீவித்திருந்து, தனதுநேர்மையான நடையாலும், பிரமாணிக்கமான ஊழியத்தாலும் எத்தனையோபேரைத் தனக்கு அறிமுகப்படுத்தி, எத்தனையோ சப்பாத்துகளைத் தன்கையால் பழுதுபார்த்துக்கொடுத்துவந்தான். இவன் குறைந்த செலவுடன் சிறந்ததோல்கள் பாவித்துச் சப்பாத்துகளைப் பழுதுபார்த்துக் குறித்ததவணைக்குள் கொடுத்துவந்ததால் அந்நகரிலுள்ள செல்வர்எல்லாரும் தங்கள்சப்பாத்துகளைப் பழுதுபார்ப்பிக்கும்வண்ணம் அவனையேநாடிச்செல்வர். இதனால்அவனுக்கு ஒருபோதும் வேலைக்குக்குறைவில்லை. செலவுக்குத் தட்டுப்பாடில்லை. ஒருமுறைக்குஇருமுறை, இருமுறைக்குப்பலமுறை அவனிடம்பழுதுபார்க்க அனுப்பப்படாத சப்பாத்துகள்இல்லை. அதனால், அவன் தனதுஅறையின் சன்னல்வழியாகத் தெருவீதியிலேசெல்வோரின் சப்பாத்துகளை அவதானித்ததும் அவைகள் இன்னார் இன்னாருடையவைகள், இன்னபெயர்வழியுடையவர்கள் அதோ போகிறார்களென்று சொல்லக் கூடிய அத்துணை அனுபவமுள்ளவனாய் இருந்தான்.

## மாட்டீனின் கஷ்டகாலம்

இப்படியிருக்க, உலகில் எவருக்கும் போலவே மாட்டீனுக்கும் அடிக்கடி பலகஷ்டங்கள் நேர்ந்தன. கடைசியாய் அவனுக்கு ஏகஆதாவாயிருந்த நேசகாதலியும் காத்திராப்பிரகாரம் வியாதிகண்டு காலஞ்சென்றாள். அதனால் மாட்டீனுக்குண்டான மனவியாகுலத்தை யாவருமே மட்டிட்டுக்கொள்ளலாம். என்றாலும் இவன் ஓர்உத்தமனாயிருந்தமையால் தேவசித்தம் இதுவெனநினைந்து ஒருவாறு மனந்தேறினான். என்றாலும் கடைசிகாலத்தில்பிறந்த தனது மூன்றுவயதுடைய புத்திரனை வெகுபட்சத்தோடுவளர்த்துத் தன் வயோதிபகாலத்தில் அவன் தன்னை ஆதரிப்பானென்றெண்ணிக் கவனமாய்ப் பராமரித்துவந்தான். அவனும்நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய் வளர்ந்து பதினைங்குவயதுமுடையவனாய்த் தன்தந்தையின் தொழிலைப் பயின்றுகொள்ளத் தொடங்கினான். அவனும் பிதாவைப்போலவே இருப்பானென்று யாவரும்வியந்துகொள்ளத்தக்கதாய் அதிசயபுத்திசாலியாய் இருந்துவந்தான். அவனுடைய திறமையைக்கண்டும், கண்டோர்சொல்லக்கேட்டும் மாட்டீன்ஆனந்தங்கொண்டு அவனைமுத்தமிடுவான். வாடிக்கைகாரருக்கு அவனை அறிமுகப்படுத்தி வருவான். அரைநிமிஷநேரமும் அவனைவிட்டுப்பிரியாது தன்கண்முன்னே வைத்துக்கொள்வான். அங்ஙனமாக, தான்ஒன்றைநினைக்கத் தெய்வம் வேறொன்றைநினைத்ததவாறாக மாட்டீன் ஒன்றைநினைக்கக் கருமம்வேறொன்றாக முடிந்தது. அவன்கொண்ட எண்ணமெல்லாம் ஊமைகண்ட கனவுபோலாயிற்று. எப்படியெனில், அவன்நேசமாய்வளர்த்த அவனுடைய அருமைப் புத்திரன் நெருப்புக்காய்ச்சல் கண்டு எதிர்பாராவிதமாய் இறந்துபோயினான். இதைக்கண்டமாட்டீன் மனம் வருந்திப் பெரிதும்புலம்பினான். தானும் இறந்துபோனாலோவென விரும்பினான். தேவனிலே அவநம்பிக்கைப்படவும், முறுமுறுக்கவும் ஆரம்பித்தான். கடவுளும் குருவும், வேதமும் கோயிலும் ஆகிய இவைகளிருந்தும் பயனென்ன என்பனவாகநினைந்து துயரிலாழ்ந்து கண்ணீர்சொரிந்த வண்ணமாய்ப் பல நாளிருந்தான்.

## சிநேகிதனின் ஆலோசனை

அவ்வாறிருக்கும்போது ஒருநாள் தனதுநகருக்கு யாத்திரையாக வந்த தனதுசொந்த ஊரவன்ஒருவனை அவன் சந்திக்கநேர்ந்தது. அவனைக்கண்டதும் மாட்டீன்வியாகுலம்மேலிட்டுக் குரலையிட்டழுது, "சிநேகிதனே, நான்இனிமேல் இந்தவையகத்தில் சீவிக்கமுடியாது; இனிஉலகத்தில் எனக்கோர் துணையில்லை; நான் சாகவேண்டுமென்பதே என்னுடைய மன்றாட்டமாகும்" என்றான். இதைக்கேட்ட சிநேகிதன்: "நீ அப்படிச்சொல்லப்படாது; நீ சீவிக்கவேண்டுமென்பதும், உன்மகன் சாகவேண்டுமென்பதும் தேவனுடையசித்தம்; அவருடைய திருவுளச்செயல்கள் நீதியற்றனவென்று நீ தீர்மானிப்பது உன்சுயநயங்கருதிச் சீவிப்பதினால்தான்" என்றான். இதைக்கேட்டதும் மாட்டீன்: "வேறுஎதற்காகநான்சீவிக்கவேண்டு"மென, "கடவுளுக்காகவே; ஏனெனில், உனக்குச்சீவியத்தை அருளுகிறவர் அவர்; ஆதலால், அவருக்காகவே நீ சீவிக்கவேண்டும்; அவருக்காய்ச்சீவிக்கக் கற்றுக்கொள்ளுவாயானால் எவ்விதமான துன்பதுயரங்கள் வந்தபோதும் இவ்வாறாகத் துயரப்படமாட்டாய்" என்றான்சிநேகிதன். மாட்டீன் சற்றுநேரம் மௌனமாயிருந்துவிட்டுத் தன்சிநேகிதனைப்பார்த்து: "கடவுளுக்காகஒருவன்சீவிக்கிறதுஎப்படி?"

## எதிர்பாராத அழைப்பு:

அப்பொழுது "மாட்டீன்! மாட்டீன்!!" என்று யாரோ அவனை அழைக்குஞ்சப்தம் கேட்டது. உடனே அவன் படுக்கையினின்றெழுந்து "ஆர் அங்கே?" என்றுகேட்டான். கதவை நோக்கினான். மறுமொழியில்லை. எவரையும் காணவில்லை. "ஆர் அங்கே?" என்று திரும்பவுங் கேட்டுப் படுக்கையிலே சரிந்துபடுத்தான். அப்போது "மாட்டீன்! மாட்டீன்!! நாளைக்குத் தெருவிலே கவனித்துப் பார்; நான்வருவேன்" என்று ஒருசப்தங்கேட்டது. அவன் மீண்டும்எழுந்து கதவைநோக்கினான். வெளியேசென்று பார்த்தான். எவரையும் கண்டுகொள்ளவில்லை. அப்போது தான்வாசித்த சுவிசேஷவாக்கியங்கள் தன்ஞாபகத்தில்வர, "யேசுக்கிறீஸ்துநாதரே என்னிடம்வரப்போகிறார்; அவரை நான் உபசரிக்கவேண்டும்; என்னால் இயன்றளவு அவரைமரியாதையோடு வரவேற்கவேண்டும்" எனத் தீர்மானித்தான். பின்னும் ஆலோசிக்கத்தொடங்கி, இதுசிலவேளை கனவாயுமிருக்கலாம்; ஆயினும்நாளை மெய்பொய்யைக் கண்டறிவேனென்று தனக்குள்ளே சொல்லி நித்திரைபோயினான். மறுநாள் பொழுதுவிடிந்தது. மாட்டீன் தன்னிடம்வரவிருக்கிறவரை மரியாதையோடு உபசரிக்கவேண்டிச் சகல ஆயத்தங்களும்செய்து அறையின் சன்னலருகே உட்கார்ந்து வீதியைநோக்கி, அவ்வீதியாலேபோகும் அந்நியரை அவதானித்தவண்ணமிருந்தான். ஆனால், போனவர்கள் எல்லாரும் அவனுக்கு அறிமுகமானவர்கள்போல் காணப்பட்டார்கள். அப்போது வயோதிகரானஒருவர் அறைச்சன்னலின் அருகேவந்துநின்றார். யாரோ வந்து நிற்பதை மாட்டீன்கண்டதும் அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்று பார்த்தபோது, ஒருவயோதிபர் பசியால்முகஞ்சோர்ந்து, கண்கள் உட்குழிந்து, இளைத்துக்களைத்து பேசத்தானும்இயக்கமற்று நிற்பதைக் கண்டான். கண்டதும் மிகவும்பரிதாபப்பட்டான். மனமிரங்கினான். அவரை அழைத்துச்சென்று பசியாற்றினாலோவென்று எண்ணினான். தாமதியாது அவரைத் தன்னறைக்குள் அழைத்துச்சென்று பாலும், பழவகையும், அப்பமும், திராட்சரசமும் வேண்டியமட்டும்கொடுத்து இனிது பசியாற்றி உபசரித்தான். பின்னர் அவருடையபெயரை விசாரித்தான். "ஸ்ரெப்பானிச்"எனப் பதில்கிடைத்தது. பின்னர் அவரோடுசற்றுநேரம் இஷ்டமாகச் சம்பாஷித்தான். வயோதிகரும் களையாறிப் பசிநீங்கி மாட்டீனைப்பார்த்து, "உமக்கு மெத்தப் பெரியஉபகார"மென்று அவனைவாழ்த்திச் சென்றார். மாட்டீனும் அவரை வழிவிட்டுத் திரும்பவும் சன்னலின் அருகேசென்று வீதியைநோக்கியபடி தன்தொழிலைநடத்தினான்.

## மாட்டீன் உபசரித்த வயோதிகர்:

அதன்மேல் அவனுக்கு அறிமுகமில்லாதஎவரும் அவன்கண்களுக்குத் தென்பட்டிலர். பொழுதுஅஸ்தமித்தது. இருள்சூழ்ந்தது. மாட்டீன்தனது வேலையைமுடித்து, ஆயுதங்களை எல்லாம்எடுத்து அந்தந்தஇடங்களில் வைத்து, விளக்கேற்றிவிட்டுத் தான் பழுதுபார்த்த சப்பாத்துகளையெல்லாம் எடுத்து ஒவ்வொன்றாய்ச் சரிபிழை பார்த்தான். பின்னர்அவன் இராப்போசனம்அருந்தித் தனதுசுவிசேஷ புத்தகத்தைக் காங்களிலெடுத்து முந்தினநாள்இரவு தான்வாசித்துவிட்ட வாக்கியத்திலிருந்து தொடர்ந்து வாசிக்க அதைவிரித்தான். ஆனால், புத்தகம் வேறோர்பகுதியிலே திறபட்டது இதற்கிடையில் கடந்தஇரவு நடந்தசம்பவம் அவன்ஞாபகத்தில் வந்தது. அவன் அதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது தனக்குப் பின்னால் யாரோஅசைந்துவரும் காலடிச்சப்தம் அவன்செவிகளில் விழுந்தது. உடனே திரும்பிப் பின்பக்கமாகப்பார்த்தான். யாரோ ஒருவர் அறையின்மூலையிலே வெண்மேகத்துள் நிற்பதுபோலப் பிரகாசம்நிறைந்தவராய் நிற்கக்கண்டான். ஆனால், அவர் யாரென்று அவன் அறிந்துகொள்ளவில்லை. அப்போது "மாட்டீன்! மாட்டீன்!! நீஎன்னை அறியமாட்டாயா?" என்ற ஒருசப்தம் பிறந்தது. மாட்டீன்: "அதுயா"ரென்று அதிசயத்தோடுகேட்டான். "அது நான்தான்" என்று மறுமொழி கிடைத்தது. உடனே அன்றுகாலை அவனால்உபசரிக்கப்பெற்ற ஸ்ரெப்பானிசைப்போல ஒருவர் மலர்ந்தமுகத்தோடு அவனை உற்றுநோக்கி மரியாதைசெய்துவிட்டு அசைந்துசென்று அப்பால்மறைந்து போயினார்.

மாட்டீன் இக்காட்சியைக்கண்டதும் ஆனந்தம்மேலிட்டுத் தான்விரித்துவைத்திருந்த புத்தகத்தின் பக்கத்தை எடுத்துப் பின்வருமாறுவாசித்தான். "நான்பசியாயிருந்தேன், அப்போது எனக்குப் புசிக்கக்கொடுத்தீர்கள்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## வெனிஸ்நகரில் அர்ச். 10-ம் பத்தி....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்த வணக்கத்துக்காக வைக்கப்பட்டிருக்கும்.

அர்ச்.10-ம்பத்திநாதர் 1914-ம் ஆண்டு காலஞ்சென்றது முதல் அவரின் புனிதஉடல் ரோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்தில் இளைப்பாற வைக்கப்பட்டிருந்து, இற்றைக்கு 56 வருடங்களின்முன்னே அதிரியாற்றிக் துறைமுகத்தைச் சேர்ந்த மக்களுக்கு அவர் கொடுத்த வாக்குறுதியைப் பூர்த்திசெய்யுமுகமாக அன்றுதினம் வெனிஸ் நகருக்குக் கொண்டுசெல்லப்படலாயிற்று. "சீவந்தராகவோ, அன்றேல் சீவனில்லாதவராகவோ நாம்திரும்பவும் வருவோம்" என்பதே அவ்வுறுதிவாக்காகும்.

## வாலிபர்கழகத் திறப்புவிழா

போளவத்தை விசாரணைப்பங்கைச் சேர்ந்த தமிழ்ப்பேசும் வாலிபர்களின் கூட்டமொன்று சென்ற 12-4-59 ஞாயிறுவாரம் காலை 10-30 மணியளவில் தமிழ் ஆணபாடசாலை மண்டபத்தில் கட்டளைக்குரவர் வண. ஸெமென்ற் பர்னாண்டோ சுவாமியவர்கள் தலைமையில் விமரிசையாக நடந்தேறியது. ஆரம்பத்தில் குரவரவர்கள் மலர்மாலை சூட்டி வரவேற்கப்பெற்றுச் செபம் வாசிக்கப்பட்டது. ஆசிரியர் பீற்றர் சோசா அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதும் கட்டளைக்குரவர் குத்துவிளக்கேற்றிக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து அவரின் ஆசிமொழி இடம்பெற்று அங்கத்தவர்கள்தெரிவு ஆரம்பமாயிற்று.

தலைவராக ஆசிரியர் டபிள்யு. இப்போலித்துஸ் திசேராவும், உபதலைவராகத் திரு. டபிள்யு. பி. ஜே. பர்னாண்டோவும், செயலாளராக ஆசிரியர் டபிள்யு. அலோசியஸ் தமெலும், பொக்கிஷதாரராக ஆசிரியர் டபிள்யு. பி. தமியான் தபறேராவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் படலாயினர். நிர்வாகசபை அங்கத்தினர்களாக ஆசிரியர்கள் டபிள்யு. மாட்டின் திசேரா, டபிள்யு. வின்சண்ட் பர்னாண்டோ, டபிள்யு. ஏ. வெனடிக் லோவு, திருவாளர்கள் அன்ரன் சோசா, ஸ்ரீவன் லோவு, அலோசியுஸ் சோசா என்பவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

பின்னர் கூட்டத்திற்கு ஓர்பெயர்தாநாமம் இடப்படவேண்டுமெனத் தலைவர்கூற, ஆசிரியர்தபறேரா "டொன் பொஸ்கோ வாலிபர்கழகம்" என்றும், ஆசிரியர் லோவு "கொன்சால்வேஸ் வாலிபர் கழகம்" என்றும் இருபெயர்களைப் பிரேரிக்க, வாக்கெடுப்புக்கு விடப்பட்டு ஐந்துகூடுதலானவாக்குகளால் "டொன்பொஸ்கோ வாலிபர் கழகம்" என்னும்நாமதேயம் சூட்டப்பட்டது. சபைப்போஷகராக அறிவிலும், ஆற்றலிலும், அனுபவத்திலும் முதிர்ந்த தலைமைஆசிரியர் திரு.பீற்றர் சோசா அவர்கள் சபையோரின் விருப்பத்திற்கிணங்க நியமிக்கப்படலாயினர். அடுத்து ஆசிரியர் டபிள்யு. ஜே. எஸ். பர்னாண்டோ, "வாலிபரும் தற்காலமும்" என்னும்பொருள்பற்றியும், ஆசிரியர் இசிதோர்பர்னாண்டோ "வாலிபர் கழகம்" என்பதுபற்றியும், ஆசிரியர் றேமுண்டுஸ் "வாலிபர் கழகத்தின் அவசியம்" என்பதுபற்றியும் உபந்நியாசங்கள் செய்தனர்.

தொடர்ந்து சிற்றுண்டி உபசரணை நடைபெற்று, தலைவர் அவர்களின் சிறுஉரை இடம்பெற்று, அழைப்பிற்கிணங்கிச் சமுகங்கொடுத்திருந்த பெரியோர்களுக்கும், உபந்நியாசங்கள்செய்த ஆசிரியர்களுக்கும் ஏனையோருக்கும் ஆசிரியர் டபிள்யு. ஏ. வெனடிக் லோவு நன்றியுரை கூறிநிற்கச் செபத்துடன் கழகஆரம்பவிழா முடிவெய்தியது.

"அன்ட்ணியிற்"

### கத்தோலிக்க குருவானவருக்கு முஸ்லீம்களின்

## இரத்ததானம்

பாகிஸ்தானைச்சேர்ந்த ரூவல்பின்டியிலே குருவானவர்ஒருவர் அபாயகரமான நோய்கண்டு வருந்தினர். அவர் சரீரத்திலே அவசியம் இரத்தஞ்செலுத்தவேண்டியிருந்தது. இரத்ததானம் செய்யும்படியாய் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனை அறியவந்ததும் இரத்ததானஞ்செய்வதை அருவருத்துத் துவேஷிக்கின்ற முஸ்லீம்கள் சுவாமியாருக்கு இரத்தோபகாரம் செய்யும்விஷயமாய் ஆஸ்பத்திரிக்கு வெளியே கியூவரிசையில் திரளாகவந்துகின்றூர்கள். இச்சம்பவத்தை ரூவல்பின்டிநகர ஹெற்றிஸ்கா மேற்றிராணியார் எடுத்துக்கூறித் தமதுமேற்றிராசனத்திலே மிகப்பெரும்பான்மையினராயுள்ள முஸ்லீம்மக்கள் கத்தோலிக்க மிஷனரிமார் மட்டிலே எத்துணை மதிப்புடையவர்களாய் இருந்துவருகிறூர்கள் என்பதைப் புலப்படுத்தியுள்ளார். இதற்கெல்லாம் அங்கு மக்களிடையே குருமாரும், கன்னியாஸ்திரிமாருமான கத்தோலிக்கமிஷனரிமார் செய்துவரும் மகத்தான சமூகதொண்டும், பிறர்சிநேகதொண்டுமேயென்று அவர் காரணங்கூறுகிறூர். சாதாரணமாக முஸ்லீம்மக்கள் குருவானவர் ஒருவரைத் தங்கள் சத்துருவெனவே கருதுகின்றூர்கள்; ஆனல், நோயாளருக்கும், ஏழைகளுக்கும், கல்வியறிவற்றவர்களுக்கும் திருச்சபை ஆற்றிவரும் தொண்டுகள் அவர்களை மிகுந்தநன்றியுள்ளவர்களாகச் செய்துவிட்டிருக்கின்றன என்றும் அவர் கூறியிருக்கின்றூர். சமீபத்திலே பாகிஸ்தான் அரசாங்கம் கத்தோலிக்க திருச்சபைமட்டிலே தனக்குள்ள பெருமதிப்பைக் காண்பித்து, இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்துவந்த கத்தோலிக்கரைக் குடியேற்றி வைப்பதற்கு உதவியாய் மேற்றிராணியாருக்கு 2,400 ஏக்கர் நிலம் வழங்கியிருக்கிறது.

---

### செபஅப்போஸ்தல சபைக் கருத்து

நாம் கூடவிருக்கும் திருச்சபைச் சாதாரண திருச்சங்கத்தின் ஆரம்பவேலைகள் சித்திகரமாக நடைபெறத்தக்கதாகச் செபஞ்செய்வதையும் 1960-ம் ஆண்டிற்கான செபஅப்போஸ்தலசபைப் பொதுக்கருத்துகளில் ஒன்றுகப் பரிசுத்த பாப்பரசர் அருளியிருக்கின்றூர். செபஅப்போஸ்தலசபை உலகமுழுவதிலும் நான்குகோடி அங்கத்தவர்களைக் கொண்டிருக்கிறது. அவ்வாண்டிற்கான ஏனைய கருத்துகளிலே, பிரிந்துபோனசபைகள் உண்மையான ஐக்கியத்துக்கு அதிகம் நெருங்கிவரும்படியாக மன்றுடுவதும் மற்றென்றுகும். பன்னிரு மாதங்களினதும் கருத்துகள் சமீபத்தில் பாப்பரசரின் கரத்தாலேயே செபஅப்போஸ்தலசபை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இவைகள் 29 பாஷைகளில் வெளிவருகின்ற வேறுவேறுன 50 திருஇருதயத்தூதன்களில் பிரசுரஞ்செய்யப்படும். சபை அதிகாரிகளுக்குப் பாப்பரசர் அளித்த பேட்டிஒன்றில், தாம் முதல்நன்மை பெற்ற அன்றுதினமே செபஅப்போஸ்தலசபையில் ஓர் அங்கத்தவராய்ச் சேர்ந்துகொண்டதாகத் தெரிவிக்கலாயினர்.

---

### பாப்பரசரும் வெனிஸ்நகர யாத்திரிகர்களும்

வெனிஸ்நகரின் பத்திறியாக்குவாயிருந்த அர்ச். 10-ம்பத்திநாதரின் புனிதஉடல் வெனிஸ்நகருக்குச் செய்யும்பிரயாணத்தில் தற்போதைய பாப்பரசரும் உடன் செல்வாரெனச் சமீபத்தில் ஓர் கதை மும்முரமாகப் பரந்தது. "ஆனல், அத்தகைய ஓர்பிரயாணத்தைச் செய்வதற்கான ஓர் தீர்மானத்தைச் செய்யுமுன் சிந்திக்கவேண்டிய காரியங்கள் அநேகம்இருக்கின்றன; நாம் இப்போதைக்கு வெனிஸ்நகருக்குப் போகமாட்டோம்; ஆனல், பிறகுபார்ப்போம்" என்று அருளப்ப பாப்பரசர் வெனிஸ்நகரிலிருந்துவந்த 1,500 யாத்திரிகர்களுக்குப் பேட்டியளித்தபோது தெரிவித்துகின்றூர். பேட்டிக்குமுன் அவர்களுக்கெனப் பரிசுத்த பிதா அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலே திவ்விய பூசை நிறைவேற்றினர். அவரது முன்னுள் மேற்றிராசனத்தைச் சேர்ந்த இந்தயாத்திரிகர்கள் வெனிஸ்நகருக்கு அவரின்பதிலாளியாக அவரால் நியமித்து, விரைவிலே கருதினல் பதவிக்கு உயர்த்திய கருதினல் ஊர்பானி ஆண்டவரால் வழிநடத்தப்பெற்று ரோமாபுரி சென்றிருந்தார்கள். பேட்டியின்போது கருதினல் ஆண்டவர் அவரின் முன்னைநாள் மக்களைப்பற்றிய பல்வேறு செய்திகளையும் எடுத்துக்கூறினர். அப்போது பல முறையும் பாப்பரசரின் கண்கள் கண்ணீரால் மல்கலாயின.

—*—

# நாற்பது வருட ருஷிய வேதகலாபனை

பேராசிரியரான டக்றர் ஊர்பான் பிளீஜ் அவர்கள் சிக்காகோநகரிலுள்ள தே போல் சர்வகலாசாலைக் கல்விப்பகுதியின் தலைவர். இந்தஅமெரிக்கபேராசிரியர் சமீபகாலத்திலே சோவியற்ருஷியாவின் தலைப்பட்டணமாகிய மஸ்கோநகரிலே கடமை பார்த்தவர். அந்நகரில் தாம் கண்டவைகளையும், கேட்டவைகளையும்பற்றி அமெரிக்க மாணவர்களுக்குப் பின்வருமாறு அவர் தெரிவித்திருக்கின்றூர்.

"ருஷியாவில இன்னுமே தொண்டாற்றுகின்ற சாதாரண கத்தோலிக்கரான அப்போஸ்தலர்கள் இருக்கின்றூர்கள். ஆனல், அவர்கள் வயதில் சற்று முதிர்ந்தவர்களே. நாற்பது ஆண்டுகளாக உக்கிர வேதகலாபனைக்குள்ளாயிருந்த ஓர்நாட்டில் இன்றுமே கத்தோலிக்கசேவை நடைபெற்றுவந்த போதிலும் அதிலிருந்து இளைஞர்கள் விலகிநிற்பது பிரத்தியட்சமாகும். கோவிலிலே பெண்கள் குறிப்புகள் எடுப்பதைக் கண்டேன். இஃது ஓர் சாதாரண வழக்கமென்று பிந்த நான் கேள்விப்பட்டேன். பூசைகாண முடியாமல் போனவர்களுக்கு அனுப்பி உபதேசிக்கும்படியாகவே இந்தக் குறிப்புரைகள் எடுக்கப்படுகின்றன.

"பெண்களில் அநேகர் கோவிலிலே பிரசங்கம் கேட்கும்போது அழுதார்கள். அதே பூசையில் ஒருசில செபப்புத்தகங்கள், பூசைச் செபப்புத்தகங்களைமாத்திரமே கண்டேன். இவைகளெல்லாம் நெடுங்காலப் பாவனையால் மஞ்சள்வர்ண நிலைமையிலும், பலவாறு சேதமுற்ற நிலைமையிலும் இருந்தன. சில கையாலே தைத்துக் கட்டப்பட்டிருந்தன. ஒருபுத்தகம் முற்றுக் கையாலே எழுதப்பட்டிருந்தது.

"மஸ்கோ நகரிலுள்ள அர்ச். லூயிஸின் ஒரேயொரு கத்தோலிக்க ஆலயம் காலை 7 மணிக்கு மக்களால் தேங்கியிருந்தது. ஆனல், அவர்கள் எவ்வளவுநேரகாலத்துடன் அங்குவந்து சேர்ந்தார்களென்பது எனக்குத் தெரியாது. அவர்கள் வந்தது எட்டு மணிப் பூசைக்காகும். அவர்களில் முக்காற்பங்குபேரும் குறைந்தபட்சம் 55 வயதுடைய பெண்களே. ஆனல், வாலிபர்களோ, இளம்பெண்களோ அங்கு காணப்படவில்லை. குருவானவர் பலிபீடத்திற்குவருமுன் எல்லோரும் தங்கள் பிரத்தியேக பக்திமுயற்சிகளில் கருத்தாயிருந்தார்கள்.

"காலை 10 மணிக்கு நான் ஆலயத்தைவிட்டு வெளிகொள்ளும்போது மக்கள் அங்குதானே தங்கிச் கீதங்கள் பாடிக்கொண்டும், செபஞ்செய்துகொண்டுமிருந்தார்கள். இவர்களில் பெரும்பாலானேர் அலங்கோலமான கிழிந்த உடைகள் அணிந்திருந்தார்கள். அத்துணை பெரும் பக்திவேகத்துடன் மக்கள் செபஞ்செய்ததை நான் ஒருபோதுமே கண்டதில்லை. மனஅருட்சிக்குரிய எதையும்காணும்போது இலகுவிலே எனக்குக் கண்ணீர் வருவதில்லை. ஆனல், அவர்களைக் கவனித்தபோது என்னை அறியாமலே எனக்குக் கண்ணீர்வந்தது. அர்ச்சியசிட்டர்களது கூட்டம் ஒன்றின்மத்தியில் உள்ளபடியே நான் முழந்தாளிலிருப்பதாக உணர்ந்தேன். சோவியற் ருஷியாவிலுள்ள கத்தோலிக்கர் வேத புத்தகங்களையோ, கத்தோலிக்க பத்திரிகைகளையோ, பூசைச் செபப் புத்தகங்களையோ, மற்றும் செபப் புத்தகங்களையோ பிரசுரஞ் செய்ய அன்றேல் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவதில்லை என்பது உண்மையே."

### மற்தல்போத்தை அறிந்தவர்

அயர்லாந்துதேச டபிளின் நகரிலே வசித்திருந்தவரான திரு. வில்லியம் சேம்பேர்ஸ் என்பவர் சமீபத்திலே காலஞ்செல்லலாயினர். ஓர்காலம் பெருங் குடிகாரனயிருந்து மனந்திரும்பிப் பெரிய மதுவிலக்கு அபிமானியாகிப் பின்னர் அருந்தவம்புரிந்து, பரித்தியாக வாழ்க்கை நடத்திவந்து, பரிசுத்தம் பரிமளிக்கப் பரமபதம் அடைந்தவரான மற்தல்போத்துக்கு மூத்திப்பேறு பெற்றபட்டம் அருளுவதற்கான விசாரணை ரோமாபுரியிலே நடைபெற்றுவருகிறது. இற்றைறக்கு 34 வருடங்களின் முன்னே நகரின் ஒடுக்கமான தெருஒன்றிலே நின்று, இவருக்கு அந்திய தேவதிரவியானுமானங்கள் அருளப்படுவதைக் கண்ணுரக் கண்டவர்களில் திரு. வில்லியம் சேம்பேர்ஸ் என்பவரும் ஒருவர். அப்போது இவர் அர்ச். சவேரியாரின் தொமினிக்கன்சபைக் கோவிலிலே திவ்வியபூசை கண்டுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். கிரான்பி என்ற அந்த ஒடுக்கமான தெருவூடாகச் செல்லும்போதே மற்தல்போத் இருவாலிபர்களால் தாங்கப்பெற்று மரணிப்பதைக் கண்டார். மற்றோர் மனிதர் தொமினிக்கன்சபைக் குருவானவர் ஒருவரைத் தேடிப் போனர். மரிக்கிறவர்களுக்கான செபஞ் சொல்லப்படும்போது இருபதுபேர்வரை அவரைப் புடைசூழ்ந்திருந்தார்கள்.

---

### வெனிஸ்நகரில் அர்ச். 10-ம் பத்திநாதர்

இற்றைறக்கு 45 வருடங்களின் முன் பரமபதமடைந்த ஓர்வெனிஸிய "கிராமிய" பாப்பானவரான அர்ச். 10-ம் பத்திநாதரின் புனித உடல் தனது கண்ணுடிப்பேழையிலே பொன்மயமாய் விளங்கிய சம்பிரமமான ஓர் வள்ளத்திலே சென்றஞாயிற்றுக்கிழமை அர்ச். மாற்குவின் மகாதேவாலயத்திற்குக் கொண்டுவரப் படலாயிற்றென வெனிஸ்நகரிலிருந்து அன்றுதினம் தந்திச்செய்தி கிடைத்துள்ளது. புனிதஉடலைக் கொண்ட பேழையானது ஓர் விசேஷ அரசாங்கறெயின்வண்டியிலே ரோமாபுரியிலிருந்து வெனிஸ்நகருக்கு முதல்நாளிரவு தனது பிரயாணத்தை நடத்தியது.

17-ம் நூற்றுண்டுக்குரிய தேசியஉடைகள் அணிந்திருந்த மாலுமிகளால் கொண்டுசெலுத்தப்பட்ட ஓர் கூட்டம் கொன்டோலா வள்ளங்களிலே நகரின் பெரிய கால்வாய்நீளம் திருச்சபைக் குருசிரேஷ்டர்கள் புனித உடலைக் கொண்டுசென்ற சம்பிரம வள்ளத்தைப் பின்தொடர்ந்து சென்றூர்கள். கொன்டோலாக்காரரால் புனிதஉடலை அடக்கிய பேழை அர்ச். மாற்குவின் மகாதேவாலயத்துக்குக் கொண்டு செல்லப்படுவதைக் கண்டுகொள்வதற்காக ஆலயவாயில்முன்பாக மாபெருஞ்சனக்கூழாம் கூடியிருந்தது. அது ரோமாபுரிக்குத் திரும்புமுன் ஒருமாதகாலம் பிர

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## சித்திரை மாதம்

**பொதுக்கருத்து:** கிறீஸ்துநாதரை அகற்றிய சமுதாயத்தில் உழைக்கும் குருமாருக்காக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** இரட்சணிய அலுவலில் ஈடுபடும் சாதாரணகத்தோலிக்கர் தங்கள் ஞானப்பணிக்குத் தேவையான ஆத்மீக, போதனை, விஞ்ஞான, யந்திரீகஅறிவில் உறுதியாக ஆயத்தப் படுத்தப்படுமாறு மன்றாடிக் கொள்வது.

சத்திய வேத

பாதுகாவலன்

1959-ம் ஆண்டு

சித்திரை மாதம் 23-ந் திகதி

# போராட்டம் தொடங்கியது

இலங்கையிலுள்ள கம்யூனிஸ்த கட்சியும், உணவுமந்திரி பிலிப்குணவர்தனவைத் தலைமையாகக் கொண்ட லங்கா சமசமாஜகட்சியும் கத்தோலிக்கதிருச்சபையை எதிர்த்துப் போர்க்கறைகூவிப் புஜங்தட்டிக் கொக்கரித்துத் தங்கள் சுயரூபத்தைக்காட்ட முன்வந்திருக்கின்றன. இவ்விரு மாக்ஸியகட்சிகளும் தங்களுள் முரண்பட்டகொள்கை உடையனவாய் இருந்தபோதிலும், கத்தோலிக்கதிருச்சபையை எதிர்ப்பதிலே தாங்கள் ஒன்றுபட்ட கொள்கை உடையன என்பதைப் பகிரங்கமாகக் காண்பிக்க முனைந்திருக்கின்றன. கம்யூனிஸம் அடிப்படுத்த வகைதேடிய நாடுகளிலெல்லாம் அதற்கு இடறுகட்டையாய் எந்தச்சமயம்இருந்ததோ அதேகத்தோலிக்க திருச்சபைதான் இலங்கையிலும் தங்கள்எடுப்புகள், திருவிளையாடல்களுக்கெல்லாம் பெரியஇடறுகட்டையாய், பரமசத்துருவாய் இருந்துவருகின்றது; ஆகவே, அது தொலைந்துபோகவேண்டும், ஒழிந்துபோகவேண்டுமென்ற கொள்கையிலே இவ்விருகட்சிகளும் பூரணஉடன்பாடுடையனவாய் இருக்கின்றன என்பது துலாம்பரமாகிவிட்டது. எங்கேயாவது ஓர்நாட்டினை அடிப்படுத்தவும், அடிமைப்படுத்தவும் காலமும்நேரமும் இதோகடுகிவந்துவிட்டதென்று காணும்போதெல்லாம் கத்தோலிக்கதிருச்சபையைச் சண்டவேகத்துடன் எதிர்த்தும், ஆதாரமின்றியே இல்லாதபடுபொய்களை எடுத்துச்சரித்தும் இந்தமாக்ஸியவாதிகள் நாடகம் நடத்தத் தொடங்கிவிடுவார்கள். கம்யூனிஸ்தகட்சிஒருபாலும், வி. லங்காசமசமாஜகட்சி மறுபாலும் சமீபகாலத்திலே இந்த நாடககோலம்பூண்டு நடிக்கத் தொடங்கியிருக்கின்றன. ''அதிகாரத்தைக்கைப்பற்றும்நோக்கமாக நாட்டிலே சமயப்பிளவை உண்டுபண்ண உணவுமந்திரி பிலிப்குணவர்த்தன முயன்றுவருகிறார்; பிறநாடுகளிலே அதிகாரத்தைக் கைப்பற்ற மாக்ஸியவாதிகள் செய்யும்பிரயத்தனங்களையே இதுசெயல் ஒத்ததாகும்; 'அப்பே லங்கா'என்ற திரு. குணவர்த்தனவின் கட்சிச்சஞ்சிகையிலே சமீபத்தில்வெளிவந்த கட்டுரைஒன்று கத்தோலிக்க திருச்சபையைத் தாக்கியிருக்கின்றது; எதிர்காலத்திலே இந்த மாதிரியானகட்டுரைகளை வெளியிடுவதை தவிர்த்துவிடுமாறு பிரதமர் அவரைக்கேட்டுக் கொள்ளவேண்டும்; புத்தராய் இருந்தாலுஞ்சரி, கத்தோலிக்கராய் இருந்தாலுஞ்சரி, இந்துவாயிருந்தாலுஞ்சரி, சுயமரியாதையுள்ளஒருவர் நாட்டிலே சமய ஒற்றுமைக்குப் பங்கம்விளைக்க உடன்படவேமாட்டார்'' என்று பாராளுமன்றத்திலுள்ள அரசாங்ககட்சி அங்கத்தவர் குழுவின் கூட்டத்திலே கைத்தொழில்மந்திரியின் பாராளுமன்றகாரியதரிசியான திரு. ஜே. சி. டபிள்யு. முனசிங்கா அன்றுகூறியதும் ஈண்டு குறிப்பிடற்பாலதாகும். கிழக்கு ஐரோப்பியநாடுகளையும், சீனவையும் வெற்றிகொள்ளுமாறு கம்யூனிஸ்தாகள் யாது தந்திரோபாயங்களைக் கையாண்டார்களோ அதேஉபாயங்களை இங்கேயும் கையாண்டுவருகிறார்கள். அகில — இலங்கை கொத்தாரிஸ் மார்சங்கத்தின் தலைவரான திரு. பி. பி. விக்கிரமாராச்சி சென்ற வெள்ளிக்கிழமை ஓர்கூட்டத்தில் பேசியபோது, ''ஹங்கேரியும், தீபேத்தும் சென்றபோக்கிலே இலங்கையையும் போக்குவ்தற்கு இங்குள்ள கம்யூனிஸ்தர்கள் கபடதந்திரமாகத் திட்டமிட்டு வேலைசெய்துவருகின்றார்கள்; கம்யூனிஸ்தகட்சிக்கு அரசாங்கம் தடைவிதிக்கவேண்டும்; அதற்குப்பதில் அரசாங்கம் கம்யூனிஸ்தர்களுக்குப் பாதையைஇலேசாக்கிக் கொண்டுவருவது மிகவும் வருந்தத்தக்கது''எனக் கூறலாயினர். கம்யூனிஸ்தர்கள் எந்தெந்தநாடுகளில் கால்வைக்கிறார்களோ அந்தந்தநாடுகளிலெல்லாம் கலக்கமும், குழப்பமும், சச்சரவும், இரத்தப்பிரவாகமும் அவர்களைப் பின்செல்வது வழக்கம். இலங்கையிலும் அவர்கள் நடிக்கத்தொடங்கியிருக்கும் நாடகத்தின்விளைவு யாதாகுமோதெரியவில்லை. எத்தனையோநாடானநாடுகளை அழிவின்பாதையில் கொண்டுசென்று படுகுழியில் விழுத்திய கம்யூனிஸத்துக்கும் அழிவுகாலம் ஓர்நாள்வந்தேதீரும் என்க.

---

## குருத்துவ வெள்ளியூபிலி

இளவாலை, சந்தானுள்கோவில் கட்டளைக்குரவராய், அப்பகுதி மூப்புச்சுவாமியாராய் இருந்துவருகிறவரான வண. எஸ். கோமெஸ்சுவாமியவர்கள் 1934-ம் ஆண்டு பங்குனிமாதம் 18-ந்திகதியன்று ஸ்பானியதேசத்தின் தலைப்பட்டணமாகிய மதிரித் நகரிலே குருப்பட்டாபிஷேகம் செய்யப்பெற்றாராகலின் அவரது குருத்துவ 25-ம்வருட வெள்ளியூபிலிவிழா சென்றபங்குனி மாதம் 18-ந்திகதிவந்துபோயிற்று. ஆனால், திருப்பாடுகளின் வாரத்தில் இந்தயூபிலிவிழா வந்தமையாலே அன்றுதினம் அது மிகவமைதியாகவே கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை சுவாமியவர்கள் நிறைவேற்றிய யூபிலித்தோத்திர பாடற்பூசைக்குப் பலகுருப்பிரசாதிகளும், கன்னியாஸ்திரிகளும், திரளான விசுவாசிகளும் சமுகமாயிருந்து பின்னர் அவரைச்சந்தித்துச் சோபனவாழ்த்துக்கூறி ஆசிபெற்றுக்கொண்டதோடு எல்லாம் அமைதியாகநிறைவாயிற்று.

யூபிலிநாயகரான வண. சைமன் கோமெஸ்சுவாமியவர்கள் சாதியிலே ஓர்ஸ்பானியர். அர்ச். பிரான்சிஸ் சவேரியாருக்குப்பின் யாழ்ப்பாணமண்ணில் கால்வைத்த இரண்டாவது ஸ்பானியர்என்று அருமைபாராட்டப்படுகிறவர். தமதுகுருத்துவவாழ்க்கைமுழுவதையும் எம்மிடையே செலவிட்டுள்ள சுவாமியவர்கள் அரிப்பு, வங்காலை, உயிலங்குளம் முதலாம் பல்வேறுவிசாரணைப் பங்குகளிலும் அருந்தொண்டாற்றித் தமக்கு இயல்பாயுள்ள அன்பாதரவு, தயைதாட்சணியம், முகமலர்ச்சியுடன் கூடிய இன்சொல், அயராமுயற்சி, கோபமேயறியாச் சாந்தமானபோக்கு ஆதியாம் சீரியகுணவிசேஷங்களாலே தமதுஞானமக்களால் வெகுவாக அன்புபாராட்டவும், சங்கிக்கவும்பெற்று வந்திருக்கின்றார். நம்முடைய ''பாதுகாவலன்'' பத்திரிகையிலே மிக்கானஆர்வமுடைய சுவாமியவர்கள் எப்போதுமே அதனைக் கருத்தாகவாசிக்கும் வழக்கமுடையராய் இருந்துவருகின்றார், அவருடன்நடத்தும் சம்பாஷணை எப்போதும் ஓர் ஆனந்தகரமானசம்பாஷணையாய் இருக்கும்.

சுவாமியவர்கள் தங்கள்மத்தியிலே கட்டளைக்குரவராய் இருக்கும்போது அவரின் குருத்துவ வெள்ளியூபிலிவிழா வந்ததையிட்டு இளவாலைக் கத்தோலிக்க மக்கள் பெருங்குதூகலம் அடைந்தார்களெனினும், அதுதிருப்பாடுகளின்வாரத்தில் வந்ததையிட்டு அவர்களுடையகுதூகலம் குன்றுவதாயிற்று. ஆயினும் அதைப் பின்போட்டு இம்மாதம்12-ந்திகதி ஞாயிறுவாரம் அதனைப்பெரிதும் சம்பிரமமாகக் கொண்டாடி, அவர்பால் தங்களுக்குள்ள உள்ளன்பையும், நன்றியறிதலையும் பகிரங்கமாகக்காட்டி நின்றார்களென அறியவந்து ஆனந்தங்கொள்ளலானோம். யூபிலிநாயகர் அவர்கள் சுகபலமும், தீர்க்காயுளும்பெற்று இன்னும்பல்லாண்டு எம்மத்தியிலே திருத்தொண்டாற்றிவர எல்லாம்வல்லஇறைவன் திருவருள்பாலிப்பாராக!

---

### பிக்குகளின் கதிர்காம யாத்திரை

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறல் ஒஸ்மன் டீசில்வாவின் பதவிகாலத்தை நீடிக்கச்செய்ய அருள்பெறும்நோக்கமாய் 100புத்தபிக்குகள் சென்றசனிக்கிழமைகாலை 30மோட்டார்கார்களில் கதிர்காமஞ்சென்றார்கள். இவர்களின் யாத்திரை கொழும்பிலே விகாரமகாதேவி பாக்கத்திலிருந்து ஆரம்பமாயிற்று. வழியிலேபலவிடங்களில் இவர்களுக்கு உபசாரணைகள்நடைபெற்றன. ஆனால், இரத்மலானையிலே தொழிலாளர்கள் இவர்களைப் பரிகாஞ்செய்தார்களாம். மாத்தறையிலும், மற்றுஞ்சிலவிடங்களிலும் கறுப்புக்கொடிகள் இவர்களைவரவேற்றனவாம்.

### மன்னார் அரசினர்ஆஸ்பத்திரி

மன்னார்ஆஸ்பத்திரியை மேலும் விசாலமாக்கி நவீனவசதிகளைக் கொண்டமுறையில் அமைப்பதற்குச் சுகாதாரபகுதி 3,85,000ரூபா ஒதுக்கியுள்ளதென்றும், கூடியவிரைவிலே வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுவருகிறதென்றும் மன்னார்க்கச்சேரியில் நடைபெற்ற அரசாங்கபகுதிகளின் இணைப்புக்கம்மிற்றிக்கூட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**TUITION**
**IN**
**SHORTHAND-TYPEWRITING**

Students (either sex) prepared for Pitmans London, London Chamb. of Comm. and other Examinations. Students already trained are in Govt. Service, Firms, Schools and other Institutions.

SHORTHAND SPEED TRAINING A SPECIALITY

JOSEPH ANDREW
"Mazenod House"
4th Cross St., Jaffna.

---

## சுதேச வர்த்தமானம்

### மாருதப்புரவியின் பரிதாபநிலை

பண்ணைக்கடல் போக்குவரத்துச் சேவைக்கென அரசினரால்வழங்கப்பட்ட மாருதப்புரவிஎன்னும் யந்திரப்படகு கடந்தபலமாதங்களாகப் பழுதடைந்தநிலையில் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தின் மேற்குப்பாகத்திலுள்ள மணல்மேட்டில் கிடக்கின்றது. அதனைத் திருத்துவதற்கான முயற்சி எதுவும் இதுவரைஎடுக்கப்படவில்லை.

### கூட்டுறவு வங்கிமசோதா

அடுத்துநிகழும் வைகாசிமாதம் 11-ந்திகதியன்று அரசாங்ககட்சியின் பாராளுமன்றகுழுவைச்சேர்ந்த எம். பி.களும், செனற்றர்களுமான 38பேர் ஒன்றுசேர்ந்து உணவுமந்திரி பிலிப்குணவர்த்தனவின் கூட்டுறவுவங்கிமசோதாவைத் தாங்கள்நிராகரிப்பதாகப்பிரதமரிடம் தெரிவிப்பர். அதற்குக் காரணம், இந்தமசோதா உணவுமந்திரிக்கு நாட்டின்பொருளாதாரத்தில் மிகுந்தஆதிக்கம் அளிக்கக்கூடியதாயிருப்பதும், அதிலேசர்வாதிகாரத்துவஅம்சங்கள் இருப்பதுமேயாகும். இதுசம்பந்தமாய்ப் பெரும்பாலான அங்கத்தவர்களின்தீர்ப்பை உணவுமந்திரிஏற்றுக்கொள்ள இணங்காவிடில் அடுத்தபடியாக எவ்விதநடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி அவரேமுடிவுசெய்து கொள்ளலாமென்றும் அவர்கள்பிரதமரிடம்கூறுவர்.

### தமிழ்ச்சர்வகலாசாலை

அடுத்துநிகழும் வைகாசிமாதம்10-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 10-30 மணிக்குத் திரிகோணமலையிலே தமிழ்ச்சர்வகலாசாலைக்கு அத்திவாரக்கல் நாட்டப்படவிருக்கிறது. இந்த வைபவத்தில் கலந்துகொள்ளும்படியாய்த் தமிழ்த்தலைவர்கள் அனைவரையும் தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்தினர் அழைத்திருக்கின்றனர். வடக்கு—கிழக்குமாகாணங்களான தமிழ்ப்பிரதேசங்களின் பாராளுமன்றப்பிரதிநிதிகளையும், நகரசபை, பட்டினசபைகள், கிராமச்சங்கங்களின் தலைவர்களையும், மலைநாட்டுத்தமிழ் மக்களின் பிரதிநிதிஒருவரையும் சர்வகலாசாலை இயக்கம் அழைத்துள்ளது. அன்றுதினம் அத்திவாரக்கல் நாட்டப்படும் கட்டடந்தான் தமிழ்ச்சர்வகலாசாலையின் முதலாம்பகுதியாகும். இது கலை, பொறியியல், விஞ்ஞானத் துறைகளுக்குப் பிரயோகிக்கப்படும். இக்கட்டடத்தைஅமைக்கச் சுமார் 40லட்சம்ரூபாதேவைப்படும். அதனால் கட்டடநிதிஒன்றைஆரம்பிக்க இயக்கம் ஏற்பாடுசெய்துவருகின்றது.

### புத்தபிக்கு கேட்கின்றார்

''சுயெஸ்விவகாரம் சம்பந்தமாக உடனடியாகவாய்திறந்து ஆட்சேபம் தெரிவித்த இலங்கைப்பிரதமர் இதுவரைதிபேத்தில் செஞ்சீனசெய்துவரும் கொடுமைபற்றி ஒருவார்த்தையாவது கூறாததுஎன்ன? இலங்கை ஏன்ஆட்சேபிக்கவில்லை?'' என்று கனம் மலவான ஞானிஸ்வர தேரோ கேட்டு, திபேத்தில் செஞ்சீனசெய்த அட்டூழியங்களையிட்டு இந்தியா, தேசியசீன, சியமாகியநாடுகள் ஆட்சேபித்துள்ளன''எனக்கூறியிருக்கின்றார்.

## புத்தபிக்குகளின் பெரியமகாநாடு

திபேத்திலே செஞ்சீனு செய்த அட்டூழியங்களை எதிர்த்தும், அறுபது வயதுகண்ட ஏழுநாயகதேரோக்களைக் கலைத்து, அவமரியாதைசெய்த சீனஸ்தானிகரின் நடவடிக்கையைஎதிர்த்தும் புத்தவிசாகப்பெருநாள் வாரத்திலே 17,000புத்தபிக்குகளின் பெரிய மகாநாடுஒன்று நடைபெறவிருக்கிறது புத்தபிக்குகளின் ஆட்சேபநடவடிக்கை தோல்வியடையுமானல் கம்யூனிஸ்தர்களிடமிருந்து நாட்டைப்பாதுகாக்கக் கத்தோலிக்கர், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஆகியோரின் இணைப்புக்கூட்டம்ஒன்று அவர்களால் கூட்டப்படும்போல்இருக்கிறது'

## கடற்படைவீரருக்குச் சிறைத்தண்டனை

சிலவாரங்களுக்குமுன் ஈயினதீவிலே ஓர்கடைக்காரரையும், மற்ருெருவரையும் கடற்படைவீரர் தாக்கியதுசம்பந்தமாய்த் தொடரப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்டு நால்வர் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். மதுபானம்அருந்தியது, தாக்கியது, திருடியதுஎன்ற குற்றச்சாட்டுகளிலே நால்வரும்விசாரணைசெய்யப்பட்டு, மூவர் தனித்தனியே இரண்டு மாதச் சிறைத்தண்டனையும், ஒருவர் ஒருமாதச்சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டார்கள்.

## 2கோடியே 30லட்சம்ரூபா

சென்ற1958-ம்ஆண்டிலே யாத்திரை, விடுமுறை சம்பந்தமாய் இந்தியாவுக்குச்சென்ற இலங்கையர்கள் அங்கு 2கோடியே30லட்சம்ரூபா செலவுசெய்திருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஆனல்,அவ்வாண்டிலே இந்திய உல்லாசப்பிரயாணிகளால் இலங்கையிலே செலவிடப்பட்டுள்ளபணம் 66 லட்சம்ரூபாவென அறிவிக்கப்படுகிறது. இற்றைக்கு ஐந்துவருடங்களின் முன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கணிக்கத்தக்க உல்லாசப்பிரயாணிகள் வந்தார்கள். ஆனல்,இப்போது 'விசா' போன்ற முட்டுக்கட்டைகளாலே அவர்கள்தொகை குறைந்துவிட்டது.

## அடிப்படை உரிமைச்சாசனம்

இலங்கையை ஓர்குடியரசாகப் பிரகடனஞ்செய்யும் புதிய அரசியற்திட்டத்திலே சிறுபான்மைச்சமூகங்களின் நலஉரிமைகளைப் பாதுகாக்கும் அடிப்படைஉரிமைகளின் சாசனம் ஒன்றும் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிறது. இந்தப்புதிய அரசியற்திட்டம் சம்பந்தமாகப் பாராளுமன்றத்திலுள்ள முக்கிய அரசியற்கட்சிகளின் தலைவர்கள் தற்சமையம் கலந்துஆலோசித்து வருகின்றார்கள். புதியகுடியரசு எந்த மாதிரி இருக்கவேண்டும் என்பதுபற்றியும் அரசியற்கட்சித் தலைவர்கள் ஆராய்ந்துவருகிருர்கள். அது இந்திய குடியரசுபோல் இருக்கவேண்டுமென்று சிலர் ஆலோசனைகூறியிருக்கின்றனர்.

## கல்விமந்திரியின் எடுப்பு

இலங்கைச் சர்வகலாசாலையின் விஞ்ஞானப்பிரிவுக்குச் சாதியஅடிப்படையில் மாணவர்களைத் தெரிவுசெய்ய வேண்டுமென்று கல்விமந்திரி கூறிய ஆலோசனையை அரசாங்கம் தள்ளிவிட்டிருக்கிறது. தனது ஆலோசனைவிஷயமாய் விவாதிப்பதற்கெனக் கல்விமந்திரி அனுப்பியிருந்த அறிக்கையும் மந்திரிசபைக் கூட்டநிகழ்ச்சிநிரலிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. சர்வகலாசாலைவிஞ்ஞானப்பிரிவிலே நூற்றுக்கு7 வீதமான மாணவர்கள் சிங்களவர்களாய் இருக்கவேண்டுமென்று கல்விமந்திரி சிபாரிசுசெய்திருந்தார். அவரின்யோசனை நாட்டின் நலனுக்கு உகந்ததல்லஎன்பதே மந்திரி சபையின் கருத்தாகும்.

## AUCTION SALE

### BEDFORD LORRY

Bedford Lorry bearing distinctive number CV—595 without route rights will be sold by Public Auction on Tuesday, 28th April, 1959 at 3-30 p.m. at the Municipal Garage, Jaffna.

The purchaser should pay the full amount and remove the lorry immediately after the sale. The lorry could be inspected at the Municipal Garage during office hours.

A. V. Chinniah,
Municipal Commissioner.

Municipal Office,
Jaffna, 17-4-1959.

## இலங்கைவானெலியில் கத்தோலிக்கநிகழ்ச்சி

### 26–4–59

இம்மாத அரைமணிநேரக் கத்தோலிக்கநிகழ்ச்சி இலங்கைவானெலியின் தேசியஒலிபரப்பில் 26-ம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 10மணிதொடக்கம் 10-30மணிவரையும் நடந்தேறும்.

தயாரித்துநடத்துபவர்: திரு. அருளானந்தம் யேசுதாசன்.

பங்குபற்றுபவர்கள்: தூத்துக்குடி மேற்றிராசனத்தைச்சேர்ந்த வண. எம். தயட்டோசியஸ் மாஸ்கறேனஸ் சுவாமியவர்கள் (பிரசங்கம்நிகழ்த்துவார்). கத்தோலிக்க குழுவைச்சேர்ந்த ஆசிரியை திருமதி செலின்பிறிற்ரோ, திரு. டாசன் பெர்னண்டோமுதலியோர்.

பாடகர்கள்: திருமதி செலின்பிறிற்ரோவும், கொட்டாஞ்சேனை நல்லாயன்பாடசாலை மாணவிகளும்.

## கத்தோலிக்க தொழிலாளர் சமாகமம்

### வைகாசி 1-ந்திகதி

தொழிலாளரின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்

**சுற்றுப்பிரகாரப்பாதை:**

திருச்சுரூபம், பாஷையூர் அர்ச். அந்தோனியார் கோவிலிலிருந்து புறப்பட்டு,

கடற்கரைவீதி
3-ம்குறுக்குத்தெரு (பாஷையூர்)
ஈச்சமோட்டை ஒழுங்கை
ஈச்சமோட்டைவீதி
ஒல்ட்பாக்வீதி
குருசேர்வீதி
அச்சகவீதி
பெரியதெரு
ரெம்பிள்வீதி
ஆஸ்பத்திரிவீதி
3-ம்குறுக்குத்தெரு
4-ம்குறுக்குத்தெரு
கடற்கரைவீதிவழியாகக்கடலணை மைதானம் வந்துசேரும்.

குறிப்பு:
பாதை ஓரங்கள் மாத்திரம் சோடிக்கப்படவேண்டும்.

புனிதவளனார் ஆசிரியபயிற்சிக் கலாசாலை,
கொழும்புத்துறை.

# ஞானோபதேச தத்துவப் பத்திரம்.

சிரேஷ்டவகுப்புகளில் ஞானோபதேசம் கற்பிப்பதற்காக மேற்படி கலாசாலையில் அளிக்கப்பட்ட விசேஷ பயிற்சியில் 1958-ம் ஆண்டில் சித்தியடைந்த ஆசிரியர்களின் பெயர்கள் வருமாறு. இவர்களுக்கு அடுத்துவரும் வைகாசி மாதம் பழைய மாணவர் தினக் கொண்டாட்டத்தின்போது தத்துவப் பத்திரங்கள் வழங்கப்படும்.

### விசேஷ சித்தி

ச. அம்புரோஸ், கண்டி.

### திறமைச் சித்தி

1. சங். சிஸ். மேரி விர்ஜினி, இளவாலை.
2. சங். சிஸ். மேரி சென் எம்மா, நாயக்கக்கந்த.
3. சங். சிஸ். மேரி சென் தார்சில், நாயக்கக்கந்த.

### சாதாரண சித்தி

ஆண்கள்

1. வி. வெ. அலெக்சாண்டர் பெரேரா, சிலாபம்.
2. பொ. அந்தோனிப்பிள்ளை, வற்றுப்பளை.
3. வே. ச. அந்தோனிப்பிள்ளை, வற்றுப்பளை.
4. ஞா. அருளானந்தம், ஊர்காவற்றுறை.
5. ச. பிரான்சிஸ் சேவியர், யாழ்ப்பாணம்.
6. அ. எ. பர்னந்து, தோப்பு.
7. எ. ம. யோசேவ், நவாலி.
8. ம. லாசறஸ், மண்டைதீவு.
9. கி. சில்வாப்புள்ளை, தோப்பு.
10. ச. அன்று சோசை, வங்காலை.
11. சு. சூசைப்பிள்ளை, முள்ளிக்குளம்.
12. இ. துரைசிங்கம், வசாவிளான்.
13. பி யாகப்பர், பலாலி.

பெண்கள்

1. அ. மேரி ரோஸ்வின்டா, இளவாலை.
2. பெ. பிலோமினு சுகிர்தமலர், கரம்பன்.
3. சங். சிஸ். மேரி ஜூலியானு, இளவாலை.
4. எ. மேரி ரோசம்மா, யாழ்ப்பாணம்.
5. பெ. மேரி பிரான்சிஸ்கா பென்சியா, தூவணை.
6. சங். சிஸ். மேரி சென் குளோடியா, நாயக்கக்கந்த.
7. இ.விக்டோறியாபெர்னண்டோ, தோப்பு.
8. க. ஞா. மேரி யோசேப்பின், கற்கோவளம்.
9. யோ. அன்னாள் மேரி, கண்டி.
10. லெ. மரியா நேவிஸ், ஏத்துக்கால்.
11. ம. விறிசித்தம்மா, சுருவில்.
12. கு. மேரி, யாழ்ப்பாணம்.
13. வ. மேரிதிரேசாபெர்னண்டோ. குடாப்பாடு.

கொழும்புத்துறை,
20–4–59

சுவாமி வ. நீயோகுப்பிள்ளை,
அதிபர்.

## பிரபல யூதகுருவின் ஆலோசனை

அமெரிக்க யூதசபைகளின் ஐக்கியசங்க தலைவரும், பிரபல யூதகுருவுமான டக்றர் மோறிஸ் எய்சென்ட்ருத் அவர்கள் கூறிய ஆலோசனை ஒன்றிலே, கம்யூனிஸத்தின் அறைகூவலை எதிர்கொண்டு எதிர்த்துச்செயிப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அறியத்தக்கதாகப் பாப்பரசர் கூட்டவிருக்கும் திருச்சபைச் சாதாரண திருச்சங்கத்தைச் சகல சமயவாதிகளும் ஒருங்கு சேரக்கூடிய ஓர்சபையாய் விசாலிக்கச்செய்ய வேண்டுமெனத் தெரிவித்திருக்கின்றார். சாதாரண திருச்சங்கம் யூதர்கள், புத்தர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள் உட்படச் சகலசமய மக்களுக்கும் திறந்துவிடப்பட வேண்டுமென்பது அவரின் கருத்தாகும். ஆனல், இவர்கூறும் ஆலோசனையின் அசாத்தியதன்மையை வத்திக்கான் அதிகாரிகள் அன்று திங்கட்கிழமை சுட்டிக்காட்டி, சாதாரணதிருச்சங்கம் கண்டிப்பாகக் கத்தோலிக்க குருசிரேஷ்டர்களுக்காக மாத்திரமே கூட்டப்படுகிறதென்றும், கத்தோலிக்கர்அல்லாதவர்கள் பிரதிநிதிகளாய் அதில் கலந்துகொள்ள முடியாதென்றும், ஆனல், அவதானிகளாகச் சமுகமளிக்க முடியுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

● ஆயிரம்முதல் இரண்டாயிரம் மைலதூரம்வரை பாயக்கூடிய ஏவும் ஆயுதங்களை அமெரிக்காவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கைஒன்று இத்தாலிக்கும், அமெரிக்காவுக்குமிடையே நிறைவேறியிருக்கிறது. இத்தாலியிலே அமைக்கப்படும் இந்த ஏவும்ஆயுததளம் 'நேற்றோ' நாடுகளின் பாதுகாப்பை அதிகப்பலப்படுத்துமாம்.

● உலகப்பிரசித்திபெற்ற கோமாளி நடிகரான திரு. சாளி சப்ளினின் தமது 70-வது பிறந்தினத்தை முன்னிட்டு விடுத்த ஓர்வேண்டுகோளிலே "அணுக்குண்டுகள், சலவாயுக்குண்டுகள் நம்மை அழிக்குமுன் நாம் அவற்றை அழித்துவிட்டுப் பிரச்சினைகளை மகாநாடுகள் மூலம் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வோமாக" எனக் கேட்டிருக்கின்றார்.

● இரும்புத் திரைக்குப் பின்னல் சோவியற் ருஷியாவின்கீழ் அடிமைப்பட்டுக்கிடக்கும் கம்யூனிஸ்தநாடுகளுக்குப் பொருளாதார உதவியளித்து, அவைகளை மஸ்கோவின்பிடியிலிருந்து தளர்த்துமாறு அமெரிக்க ஜனதிபதி ஐஸனேவருக்கு அதிகாரமளிக்கும் மசோதாஒன்று அமெரிக்க செனற்சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை | 7-00மணி: | திவ்வியபூசை (ஆசனக்கோவில்) |
| | 9-00மணி: | சம்பாஷணைகள் |
| | 10-30மணி: | திருமணித்தியாலம் |
| | 11-30மணி: | செபமாலை |
| மாலை | 2-00மணி: | சம்பாஷணைகள் |
| | 4-30மணி: | சுற்றுப்பிரகார ஆரம்பம் |
| | 7-00மணி: | திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் |

எஸ். எம். வில்லி,
காரியதரிசி.

# அர்ச். சூசையப்பரின் சிறியநாய் அந்திரே பிறதர்

[இஃது சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசர்களில் ஒருவராயிருந்து காலஞ்சென்ற சங். பி. இஞ்ஞாசிமுத்து, S. S. J. பிறதர்அவர்களால் தமிழாக்கஞ் செய்யப்பெற்றது.]

(தொடர்ச்சி)

அந்திரேபிறதர் சஞ்சூசையப்பரின் தயாளத்தைக் காண்பிக்க மேல்வருஞ் சம்பவத்தை வெளிப்படுத்திவருவார். ஓர் மனுஷியின் முதுகிலே பென்னம்பெரிய தோர் கட்டுத் திரண்டெழும்பிவிட்டது. வைத்தியர்ஒருவர் அதைச்சோதித்து ஆசுரவைத்தியமல்லாது வேறொரு வைத்தியமும் பலிக்காதென்றுதிர்மானித்து அதற்கு நாளுங் குறித்துவிட்டனர். அவளோசத்திர வைத்தியத்துக்குப்போகுமுன்சூசையப்பரே சரணமென்று அவர் ஆலயத்துக்குச்சென்றாள். பென்னம்பெரியகட்டு, சின்னஞ்சிறிய தழும்பு முதலாய் இல்லாதவிதமாக முற்றாய் மாறிவிட்டது. எனினும், சத்திர வைத்தியர் குறித்தநாளிலே அவரிடஞ்சென்று தன்முதுகைப் பார்த்துப் பரிசோதிக்கவிட்டுவிட்டாள். சத்திரவைத்தியர் கட்டையுங்காணமல், அது இருந்தஇடத்தையுங் காணமல், முதுகின் எந்தப்பக்கத்திலே கட்டுஉண்டுபட்டிருந்ததென்று வினவவேண்டியவரானார்.

ஓர்நாள் ஓர் மனிதன் பிறதர் அந்திரேயுடைய கருமசாலைக்கு வந்து "மார்பிலே உண்டுபட்ட புற்றுநோயினலே எனது சகோதரி மகாவாதைப்படுகிறாள்; அதுஉள்ளுக்குப் பற்றிப்படர்ந்து மூன்று விலாஎலும்புகளிலே அழுகல்தாவிவிட்டது; சத்திரப்பிரயோகமே அவளைத் தப்பவைக்கஉள்ள ஒரே ஒருஉபாயம்; அதுவுந் தாமசமின்றிச் செய்யப்படவேண்டுமென்று இரண வைத்தியர் சொல்லுகிறார்" என்றான். "சத்திரம்வைக்கச் சம்மதிக்கவேண்டாம்; சூசையப்பர் அவளைச் சொஸ்தப்படுத்துவார் என்று உன்சகோதரிக்குப் போய்ச்சொல்" என்று துணிபாகப் பிறதர் தேற்றுரைகூறி அவனை அனுப்பிவிட்டார். ஆனல், அவன் தினந்தினம் மத்தியானவேளையில்வந்து "எனதுசகோதரி மேலும்மேலும் அசாத்தியமான நிலைபரத்துக்குள்ளாகி வருகிறாளே; சாகப்போகிறாளே" என்றுகோட்டரவோடு தெரிவித்துவருவான். பிறதரோ, "அவளுக்கு வேறொரு நோயும்இல்லாவிடில் சாகவேமாட்டாள்" என்று திட்டமாய் உறுத்திச் சொல்லிவருவார்.

புற்றுநோய்இரணம் சினப்புக்கொண்டு முற்றும்அசாத்திய இரணமாகிவிட்டது. அழுகல்தாவிய என்புகள் அறப்பழுதாகிவிட்டன. வைத்தியனும் இனிச்சத்திரவைத்தியத்தாலும் ஒருபயனும் வரவேமாட்டாதெனநிச்சயித்துச் சொல்லிவிட்டான். நோய்வாய்ப்பட்ட பெண் உத்தமியோ சஞ்சூசையப்பரில் ஊன்றிவைத்த நம்பிக்கை ஒருசிறிதுந்தளரவிட்டவளல்ல. சஞ்சூசையப்பரும் இரணமானது ஒருகிரணம் அளவுதானுமின்றிப் பூரணமாயாறி மறைந்துவிடவும், அழுகிய் விலா என்புகள் முழுதுங்குணமாகிப் பெலப்படவுஞ்செய்து தமது அப்போஸ்தலரின்வாக்கை மெய்ப்பித்துவிடலானார்.

மொன்றியல் நகரிலுள்ள வைத்தியசாலையிலே உதவிவைத்தியராக இருந்தஒருவரின் ஒருகாலிலே இரத்தத்தாரை அழற்சி உண்டுபட்டு எவ்விதசிகிச்சையாலுங் குணமுறாததால், அக்கால் நடந்துலாவ வழங்கக்கூடாததாக வந்துவிட்டது. இனியுள்ள ஆயுட்காலமெல்லாம் அவர் அக்குட்கோலூன்றியே ஊசாடித்திரிய வேண்டுமென்று வைத்திய நிபுணர்கள் தீர்ப்புக்கட்டிவிட்டார்கள். ஓர்நண்பன் ஏவியபடி இந்த வைத்தியர் பிறதர்அந்திரேயிடம் சரண்புகுந்தார். பிறதர் அவரை அன்பாயேற்று "நீர் ஓர் வைத்தியர்; உமது பெற்றார் உம்மைஆளாக்க இறைத்தபணமும், நீர்படித்த வைத்தியகல்வியும் பாழ்பட்டுப்போகச் சூசையப்பர் விடவேமாட்டார்; நம்பிக்கையாயிரும்" என்று திடவுரை கூறியபின், "உமது அக்குட்கோலைப் போட்டுவிட்டு அந்தக்கதவண்டைமட்டும் நடப்பீராக" என்றார். வைத்தியர் கதவண்டைபோவதும், பிறதரண்டை வருவதுமாகச் சிறிதுநேரம் நடந்தார். அதன்பின்னர், "அக்குட்கோலைக்கொண்டுபோய் ஆலயத்திலே வைத்துவிட்டு, அர்ச். சூசையப்பர் உமக்கு அருளிய இம்மகத்தான ஆரோக்கியத்துக்காக அவருக்கு நன்றித்தோத்திரஞ் செலுத்துவீராக" என்றார்.

இந்த அருட்சம்பவம் நிகழ்ந்ததன்மேல் எட்டுவைத்தியர்கள் தங்கள் நட்பாளர் ஒருவருடைய வீட்டிலே ஒன்றுகூடி: "பிறதர்அந்திரே ஒரு செகசாலப்புரட்டர்; வைத்தியசாஸ்திரத்திலே அவருக்கு ஒருமண்ணுமே விளங்காது; சூசையப்பர் ரூபப்பதக்கமும், தீபத்தைலமுந்தான் அவருடையஅவுஷதம்; ஒரேஒரு அற்புத ஆரோக்கியந்தானும் அவர்அருளியதாக எவனும் உருசுப்படுத்த முடியவேமுடியாது" என்றபான்மையாய்ப் பழித்து நகைத்துப் பேசிக்கொண்டார்கள். இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவர்மேற்படி வைத்தியருக்கு அருளப்பட்ட ஆரோக்கியத்தை எடுத்துச்சொல்லியும் அவர்கள் பழிப்புரையை நிறுத்தாதபடியால், அவர் அந்த வைத்தியரை உடனேஅழைப்பித்து அவர்கள்முன்பாக நிற்கச்செய்யவே, எல்லாருங்கூடி "நிலத்திலே கால்பாவ இயலாதிருந்த உம்மைக் கக்கத்தண்டத்தை வீசிவிட்டு நடக்கும்படி அந்திரேபிறதர் செய்தது உண்மைதானே?" என்று ஆவலாய் வினவினார்கள். "ஆம், அது உண்மையே; இவ்வேளையும் என்காலில் எவ்வளவேனும் நோவில்லையே" என்று வைத்தியர் கூற, நகைத்துப் பழித்து நாக்குவளைத்தவர்களெல்லாரும் வாய்புதைத்து நிற்கவேண்டியவர்களானார்கள்.

நொண்டியான ஓர்வாலிபப்பெண் பிறதருடைய முகதாவில் நின்று "எனது சகோதரி நோய் நீங்கிச் சொஸ்தமாகச் செய்யவேண்டுமென்று குறையிரக்க ஐக்கிய நாட்டில்நின்று (The United States) வந்திருக்கிறேன்" என்றாள். உனக்குஞ்சொஸ்தம் வேண்டியிருக்கின்றதே. அதை ஏன் நீ கேட்கிறதில்லை?" என்று பிறதர் வினவ, "என்னைக்காட்டிலும் என்சகோதரிக்கே சொஸ்தம் அத்தியந்தஅவசியம்; ஏனெனில், அவள் எட்டுப் பிள்ளைகளுக்குத் தாயாக இருக்கிறாள்" என்றாள். "இந்தநிமிஷத்திலேயே உன்சகோதரி சம்பூரண சௌக்கியமாயிருக்கிறாள். ஆகையால் அவளைப்பற்றிய கவலையை ஒழித்துவிட்டு நீ குணப்படுவதைப் பற்றி நினைப்பாயாக" என்று சொல்லியபின்பு, அவளுடைய கக்கத்தண்டங்களை வாங்கிக்கொண்டு தற்சணமே அவளை நடக்கச்செய்தார். அவள் ஆனந்தமிகுந்து தனதுமுடம்நீங்கிய சுபசெய்தியை உடனுக்குடனே சகோதரிக்குத் தந்திமூலமாய்த்தெரிவித்துவிட, அவள் தானுஞ் சடுதியாக ஆரோக்கியம் அடைந்துகொண்டதாகப் பிரதித்தந்தி அனுப்பிவிட்டாள்.

(தொடரும்.)

# அங்கும் இங்கும்

## தமிழரும் பொருளாதாரமும்

"தமிழ்மக்கள் தங்கள்சொந்தப் பிரதேசங்களில் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து தனித்துவாழக்கூடிய பொருளாதாரபலம் பெற்றுவிட்டார்கள் என்பதைச் சிங்களச்சகோதரர்கள் என்று நன்குணருகின்றார்களோ அன்றேஅவர்கள் சமஷ்டிஅரசியல்வழங்க முன்வருவார்கள்என்பதில சற்றேனும்ஐயமில்லை. பொருளாதார அபிவிருத்தியிற்றான் நமது அரசியல்விடுதலை தங்கியுள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது."

திரு. வி. ஏ. கந்தையா,
— எம். பி.

## வரவேற்கத்தக்கது என்ன ?

"இலங்கையிலே மிகவும்தீவிரமான முறையில் அதிகரித்துவரும் சனப்பெருக்கத்தைக் குடும்பகட்டுப்பாட்டினல் தடுத்துவிடப் பிரதமர் பண்டாரநாயகா முயற்சிக்கிறார். பலவந்தமான இந்தமுறை ஏற்கத்தக்கதல்ல. இராஜாஜி, காந்திஜி ஆதியோர் சொல்லியிருப்பதுபோல அனுசாரத்தில் அது முடிந்துவிடுமாகையால் தன்னடக்கத்தின்மூலம் கட்டுப்படுத்துவதே வரவேற்கத் தக்கதாகும்."

திரு. சி. வன்னியசிங்கம்,
— எம். பி.

## வழக்காடுவதும் ஒன்று ?

"யாழ்ப்பாணமக்கள் தங்கள் பழைய பண்பாட்டினை — கலாசாரவாழ்வினைப் புறக்கணித்து விபரீதமான பாதையிலே இப்பொழுது செல்ல முயல்வதாகவே தோன்றுகின்றது. அவர்களது கலாசாரத்தில் வழக்காடுவதும் ஒன்றாகிவிட்டதைக்காண நான் மிகவும்வருந்துகிறேன். ஒப்பற்ற தமிழ்க் கலாசாரத்தைப் புறக்கணித்துவிட்டுத் தங்கள் பொருளாதார வளத்தையே கெடுத்துக்கொள்ளும்வகையில் அவர்கள் நீதிஸ்தலங்களில் இன்று அலைந்துகொண்டிருக்கிறார்கள். இந்தநிலை அடியோடு மாறவிட்டால் எதிர்காலத்தில் நமது பொருளாதார முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படுமென்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்"

திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா,
யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதி

## வைகாசிமாதம் 26-ம் திகதி

"இன்றுதினம்தான் நாட்டில் வகுப்புக்கலவரங்கள் ஏற்பட்டன. தமிழ்மக்கள் அநாதரவானநிலையில் இருக்கும்போது பலியாகநேர்ந்தது. தமிழனென்ற காரணத்தால் உயிர்நீத்த இத்தியாகபுருஷர்களை நாம் மறத்தல்கூடாது. அவர்களை நினைவுகூர்தல் எங்கள் கடனாகும். எங்கள் மனதில் நம்பிக்கை உணர்ச்சி இத்தினத்திலே எழவேண்டும். வருங்காலம் நன்மைமிக்கதாய் இருக்குமென்ற நம்பிக்கையுடன் நோக்குவோம். வெறும்வாய்ப்பேச்சால் பயனில்லை. மேடைக் கர்ச்சனையால் பெறுவது எதுவுமில்லை. எங்கள் வாழ்க்கை வளம்பெற ஓர் சுபீட்சதிட்டம் வகுப்போம். அரசாங்கத்தின்உதவியை இனிமேல் எதிர்பார்க்க முடியாது. எம்மையே எமக்குதவி. எனவே, குடிசைக்கைத்தொழில் போன்றவற்றில் அதிககவனம் செலுத்துவோம். வைகாசிமாதம் 26-ந் திகதி எமக்குப் புத்துணர்ச்சி ஊட்டட்டும். எமதுபுகலிடம் வடக்கு-கிழக்கு மாகாணங்களே என்பதை நினைவுறுத்திய இத்தினம் தமிழர் நாம்புகளில் புதுஇரத்தம் செறியச்செய்யட்டும்."

திரு. ஏ. எஸ். டி. கனகசபை,
மட்டக்களப்புப் பட்டினசபைத் தலைவர்

## மனித சமுதாயத்திற்கே நஞ்சு

"மனித பிரச்சினையைக் கம்யூனிஸமோ அன்றேல் ஜனநாயகமோ தீர்க்க முடியாது. இன்னும்தீர்த்தபாடுமில்லை. கம்யூனிஸ்தஆட்சியே பூலோகசொர்க்கமென மனிதர்கள்நினைப்பது தவறு. அதிலும் இஸ்லாமியர்நினைப்பது இறைவனை அவமதிப்பதுமாகும். கம்யூனிஸம் மனித சமுதாயத்திற்கே நஞ்சாகும். இவ்விடயத்தை ஒவ்வொரு முஸ்லீமும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்."

ஜனப் யு. எம். செயத் அகமத்,
இலங்கைத் தேசிய
இஸ்லாமியகட்சித் தலைவர்

## ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது

"வடபகுதியிலே ஓர்பிரமாண்டமான நெசவுஆலையை நிர்மாணிக்கப் பலதமிழ்ப்பிரமுகர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்குத்தேவையான முதலீட்டில் பங்குகள்வாங்கி விரைவிலே அத்திட்டம் நடைமுறைக்குவர அநேகரின்ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது. படித்த இளைஞர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவிலேனும் இதனல் குறைந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது"

திரு. கே. எஸ். முத்துவேலு,
யாழ்ப்பாணடிஸ்திறிக் கிராமஅபிவிருத்தி
மேற்பார்வையாளர்.

## நம்பியிருப்பதில் பயனில்லை

"நமதுசமுதாயம் இன்றிருக்கும்நிலையில் பொருளாதாரப் போராட்டந்தான் முக்கியமானது. அதன்மூலமே அரசியற்போராட்டம் வெற்றிபெறமுடியும். தமிழனின் பொருளாதாரம் இன்றுவரை அரசாங்கஉத்தியோகம், வர்த்தகம் ஆதியவற்றில்தான் தங்கியிருந்தது. இனிமேலும் அவைகளை நம்பியிருப்பதில் பிரயோசனமில்லை. வடபகுதிமக்கள் இன்றுவிவசாயத்தில் முக்கியகவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றனர். கூடுமானமட்டும் அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டைவிட்டுப் புதியகுடியேற்ற திட்டங்களுக்குச் செல்லவேண்டும். வட்டுக்கோட்டைப் பகுதியிலே கிளெறிக்கல்பரீட்சையில் சித்தியடைந்தசிலர் அந்தப்பதவியை வெறுத்துக் குடியேற்றதிட்டங்களில் காணிபெற்றுள்ளனர். இது வாலிபர்களுக்கெல்லாம் ஓர்நல்ல முன்மாதிரியான செயலாகும்."

திரு. வி. என். நவரத்தினம்,
— எம். பி.

## ஆனையிறவுக்குத் தெற்கேயல்ல ........

"யாழ்ப்பாணக் குடாநாட்டின்சனத்தொகை சென்ற 1946-ம்ஆண்டுமுதல், 1959-ம் ஆண்டு வரையிலுள்ள 13வருடங்களிலும் 50விகிதம் அதிகரித்திருக்கிறது. இச்சனப்பெருக்கம் மிகவதிகமான ஒன்றாயிருக்கலாம். ஆயினும், சிறுபான்மைஇனத்தவரைப்பொறுத்தவரை குடும்பகட்டுப்பாட்டில் ஈடுபட்டுச் சனப்பெருக்கத்தைக் குறைக்கவேண்டிய அவசியமில்லை. சனப்பெருக்கத்துக் கேற்றவகையிலே நிலம்விரிவடையமாட்டாது. ஆகவே, நமதுபாரம்பரியமான நிலத்தைப்பாதுகாப்பது அத்தியாவசியமானதாகும். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் நமது பரம்பரைச்சொத்தாக இருக்கவேண்டுமேயானல் அப்பகுதிகளில் மிகுந்தஆர்வத்துடன் சென்று நாம்குடியேறவேண்டும். ஆனையிறவுக்கப்பால்செல்லுங்கள்என்று வடபகுதிமக்களுக்குச் சொல்லுவது இன்றையநிலைக்கு உகந்ததல்ல. ஆனையிறவுக்குத் தெற்கேயல்ல, யாழ்ப்பாணடிஸ்திறிக்கைவிட்டு வெளியேறித் தெற்கே செல்லுங்களென்றுவற்புறுத்தவேண்டியிருக்கிறது."

சி. திரு. வன்னியசிங்கம்,
— எம். பி.

# அர்ச். சூசையப்பரிடம் போவோம்

யேசுக்கிறீஸ்துநாதர் மனுஷாவதார மெடுத்து உலகில் சீவித்தகாலத்திலே அர்ச். கன்னிமரியம்மாளுக்கு அடுத்த படியாக அவருடன் நெருங்கிய தொடர்பூண்டிருந்தவர் அர்ச். சூசையப்பர். மனிதசந்ததியை மீட்டிரட்சிப்பதற்குச் சர்வேசுரன் தமது ஏக குமாரனை உலகுக்குஅனுப்பத் திருவுளங்கொண்டபோது அவருக்குக் கைத்தாதையாக அர்ச். சூசையப்பரைத் தெரிந்தெடுத்தார். வேதாகமம் அர்ச். சூசையப்பரை நீதிமான் என்னுஞ் சிறப்புப்பெயரால் அழைக்கிறது. சகல ஞானமுங்கொண்ட சர்வேசுரன் அர்ச். சூசையப்பரிலும் அதிகம்தகுதிவாய்ந்த மற்றொருவரைத் தமது திருக்குமாரனுக்குக் கைத்தாதையாகத் தெரிந்தெடுக்க முடியவில்லையென்றால் அவரின் மகிமைபெருமைதான் என்னே!

அர்ச். சூசையப்பர் திருக்குடும்பத்தின் தலைவர். அவர் பரிசுத்த கன்னிமரியாயைத் திருமணஞ் செய்துகொண்ட நாட்தொட்டுத் தமது மரணபரியந்தம் திருக்கன்னித் தாயாரையும், தேவகுமாரனையும் பராமரித்துப் பாதுகாப்பதிலே கண்ணுங்கருத்துமாயிருந்தார். அவர் ஊக்கத்துடனும், பிரயாசையுடனும் நெற்றிவியர்வை நிலத்தில்சிந்தத் தமது தச்சுத்தொழிலை நடாத்திவந்தார். அதில் தாம் பெற்ற ஊதியத்தைக்கொண்டு குடும்பத்துக்கு அவசியமான உணவு, உடை ஆதியனவற்றைப் பெற்றுக்கொடுத்தார். அத்துடன் அப்புனிதகுடும்பம் சிக்கனமும், நாணயமும் பூண்டொழுகத் தம்மால் ஆனதெல்லாஞ் செய்தார். திருக்குடும்பத்தின் ஒப்புயர்வற்ற தலைவராகிய அர்ச். சூசையப்பர் கிறீஸ்தவகுடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலைவராக அமைக்கப்படுவது எத்துணைபொருத்தமானதென்று எடுத்துக்கூறவேண்டிய அவசியமில்லை.

அர்ச். சூசையப்பர் திருக்குடும்பத்தின் தலைவராயிருப்பதால், அவர்குடும்ப தலைவர்களின் பாதுகாவலர். திருக்குடும்பத்தைப் பராமரிக்கும் வேலையை அவர் செய்ததால், குடும்பதலைவர்களாகிய தகப்பன்மார்களின் இக்கட்டு இடைஞ்சல்கள்எல்லாம் அவருக்கு நன்கு தெரியும். அவர் எங்ஙனம் தமது வேலையைப் பிரமாணிக்கத்துடனும், மதுர குணத்துடனும் செய்து முடித்தார்என்பதை எல்லாத் தகப்பன்மாரும் கண்டுபாவித்தல் அவசியம்.

அர்ச். சூசையப்பர் தொழிலாளர்களின் பாதுகாவலர். தொழிலாளர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தங்கள் நாளாந்த உணவுக்கு அவசியமான பொருளைச் சம்பாதிப்பதற்காக வேலை செய்ய வேண்டுமென்பதை அவர் நன்கு அறிவார். ஆதலால், தொழிலாளர்கள் தங்களுடைய வேலைகளைக் கபடமின்றிப் பிரமாணிக்கத்துடன் செய்வதிலே அவரைப் பின்பற்றவேண்டும்.

அர்ச். சூசையப்பர் நல்மரணத்தின் பாதுகாவலர். அவருக்குக்கிடைத்த பாக்கியமான மரணம் உலகில் வேறுஎவருக்கும் கிடைக்கவில்லை. அவர்மரணிக்கும்போது தேவசுதன் அவரின் தலைமாட்டிலும், திருக்கன்னிமரியாய் கால்மாட்டிலும் இருந்தார்கள். அர்ச். சூசையப்பர் அடைந்த பாக்கியமே பாக்கியம்! அர்ச். சூசையப்பர் சீவியத்திலும், மரணத்திலும், மரணத்துக்குப் பின்னரும் தேவகுமாரனுடனும், கன்னிமரியாயுடனும் இருக்கும்பாக்கியம் பெற்றார். அவர் பாக்கியவந்தர். ஆதலால், அர்ச். சூசையப்பரிடம்போவோம்! அவர்ஒத்தாசையைநாடுவோம்! அவரின் சலுகையால் பாக்கியமாய் வாழ்ந்து, பாக்கிய மரணமடைவோம்!

M. A.

## மேதினத் தூது

எத்தகைய தாழ்ந்த தொழிலாய் இருந்தபோதிலும் அத்தொழில்செய்பவர்கள் நீதியும், உண்மையுமுள்ளவர்களாய் இருந்தால் அத்தொழிலை இழிவாகக்கருத இடமில்லை. எத்தொழிலுக்கும் அதற்குரிய சிறுஞ்சிறப்பும், பெருமையும் உண்டு. ஏனெனில், எந்த வேலையும் தேவன்சிருட்டித்தவைகளை மக்களுக்கு உதவக்கூடிய பொருட்களாக்குகிறது. அதனால், சிருட்டிகரின் வேலையை மனிதனின்தொழில் பூரணப்படுத்துகிறது. தொழில் மகத்துவமுடையது. கிறீஸ்துநாதர் தச்சரின் மகனாக அவதரிக்கச் சித்தங்கொண்டதிலிருந்து அதன் மகத்துவம் புலப்படுகிறது.

### தொழிலாளர் மட்டில் முதலாளிகளின் கடமைகள்

தொழிலாளி கண்ணியமாக வாழ்வதற்கு அவசியமானசம்பளம் கொடுக்க வேண்டும்.

தொழிலாளி வேலைஇல்லாது திண்டாட விடக்கூடாது

தொழிலாளிக்குப் பத்திரமும், பாதுகாப்பும் அளிக்கப்படவேண்டும்.

தொழிலாளிக்கு அபிவிருத்திக்கும், முன்னேற்றத்துக்கும் ஏதுவான வழிவகைகள் ஆக்கிக்கொடுபடவேண்டும்.

### தொழிலாளர்களின் கடமைகள்

தொழிலாளர் கல்வியறிவில் முன்னேறவேண்டும்.

தொழிலாளர் தங்கள் நிலையைச் சீர்ப்படுத்தவேண்டும்.

தொழிலாளர் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க ஒன்றுபடவேண்டும்.

தொழிலாளர் தங்களைக் கைப்பொம்மைகளாக்க முயலும் பணம், பதவி மோகங்கொண்ட போலித் தலைவர்களுக்கு அடிமைப்படாதிருக்க வேண்டும்.

முதலாளி தன்இஷ்டப்படி ஆட்டிவைக்கத் தொழிலாளி அவர்களின் அடிமையா? யந்திரமா? பொதிசுமக்குங் கழுதையா?

தொழிலாளரின் உரிமைகளை வாதாடிப் பெற்றுக்கொடுக்கத் தொழிற் சங்கங்கள் இல்லாதகாரணத்தால் அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரித்தல் பெரும் அநியாயம். அத்துடன் தொழிற்சங்க தலைவர்கள் தொழிலாளர்களின் ஆதரவால் பெற்ற அதிகாரங்களைத் துர்ப்பிரயோகஞ் செய்வது பெரும் நம்பிக்கைத்துரோகமாகும்.

கடவுளை மறப்பதால், குடும்பக்கடமைகளை உதாசீனஞ்செய்வதால், முதலாளிமார்களை ஏமாற்றிக் கள்ளஞ் செய்வதால், சகபாடிகளை ஏமாற்றுவதால், சமூகத்துக்கு அநீதி விளைப்பதால் தொழிலாளி ஒருபோதும் தனது நிலையை உயர்த்தமுடியாது.

மேதினத்தன்று உலகிலுள்ள தொழிலாளர்களெல்லாம் முதலாளிமாருக்கும், கருமாதிகாரிகளுக்கும், தொழில்நுட்பக் கலைஞருக்கும், பிறருக்கும் தங்கள்நன்றியைப் பகிரங்கமாகச் சமர்ப்பிக்கவேண்டும்.

கடவுள் எல்லாருக்கும் பிதாஎன்பதை மேதினத்தன்று உலகிலுள்ளமக்கள்சகலரும் நன்றியறிந்த சிந்தையுடனும், ஆசாரத்துடனும் பகிரங்கமாக அறிக்கையிடவேண்டும். மக்கள் எல்லோரும் ஒருபிதாவின் பிள்ளைகளாயிருப்பதால் எல்லோரும்சகோதரர்கள். ஒரேபிதாவினால் படைக்கப்பட்டுக் கிறீஸ்துநாதரால் இரட்சிக்கப்பட்ட நாம்எல்லோரும் ஒருமித்துச் சமூகச் சிக்கல்கள் எல்லாவற்றையும் சீர்ப்படுத்திச் சமாதானத்துடன் அளவளாவி ஆனந்தமாய் வாழவேண்டும்.

M. A.

# "வெண்" மேதினம்

## தொழிலாளியான அர்ச். சூசையப்பர் திருநாளின் ஆரம்ப வரலாறு

ரோமாபுரியிலே 1955-ம் ஆண்டு வைகாசிமாதம் 1-ந் திகதியன்று பிரஸ்தாபமாக நடைபெற்ற தொழிலாளர் தினவிழா தனக்குரிய மகத்தானஸ்தானத்தை வகித்துத் தனதுஉண்மைக் கருத்தை உணர்த்திவிடலாயிற்று. ஆடவர்களும், பெண்மணிகளுமாகிய இருபாலாரையும்அடக்கிய தொழிலாளர்கள்மத்தியில் காணப்படவேண்டிய கத்தோலிக்க அடிப்படையானகொள்கைகளின் மாபெரும் வெற்றியானது அன்றுதினம் புகழ்ச்சிக்குரிய விதமாகக் கொண்டாடப்படலாயிற்று.

பரிசுத்தசுகந்தங்கமழச் சென்றவருடம் பரமபதம்அடைந்த நமது அருமைத்தந்தை 12-ம் பத்திநாத பாப்பானவர் தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் புதியதிருநாளை 1955-ம் ஆண்டு வைகாசி 1-ந் திகதியன்று பிரகடனஞ்செய்த மகாவைபவத்தைப்பற்றிச் சுருக்கமாகநினைவூட்டுவது விரும்பத்தக்கதாகும்.

### "இதுஉங்களுக்குச் சம்மதமா?"

ரோமாபுரியிலே அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய சதுக்கத்திலே பாப்பரசரின்பேச்சை ஆடாமல்அசையாமல் அவதானமாகச் செவிமடுத்துக்கொண்டிருந்த ஏழரைலட்சம் தொழிலாளரின்செவிகளிலே ஒலிபரப்பிகளின் மூலம் இக்கேள்வி கிணீர் எனத் தொனித்தது.

இத்தாலிய "கத்தோலிக்க தொழிலாளர்சங்கம்" நிறுவப்பட்ட பத்தாம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுமுகமாக அத்தேசத்தின் நாலாபக்கங்களிலுமிருந்து பாப்பானவரின் திருப்பாதத்தண்டை குழுமியிருந்த அவர்களெல்லாம் கத்தோலிக்க தொழிலாளர்களே.

தொழிலாளியான அர்ச். சூசையப்பரின்திருநாள் இனிமேல் வருடந்தோறும் வைகாசிமாதம் 1-ந் திகதி கொண்டாடப்படுமென அவர்களுக்குத் தமதுசொற்பொழிவிலே பரிசுத்த தந்தை அறிவித்தார். அதன்பின் சற்றுத் தரித்துநின்று புன்னகைபூத்த வதனத்துடன் "இது உங்களுக்குச் சம்மதமா?" என்று வினவினார். அவருக்குக்கிடைத்த பதிலையும், அப்போது எழுந்த ஆர்ப்பரிப்பையும், ஆனந்தக் கூச்சலையும் வர்ணிக்கமுடியாது. திடீரெனக் குமுறிவெடிக்கும் பூகம்பத்தின் பயங்கர இடிஓசையையும் அந்தஆர்ப்பாட்டம் தோற்கடித்து விட்டதெனலாம். ஏழரைலட்சம்மக்களும் தங்கள் ஆர்வத்தையும், சந்தோஷத்தையும் காட்ட ஏகோபித்துச்செய்த உரத்த ஆர்ப்பாட்டம் என்றும் மறக்கற்பாலதல்ல. அந்தக்காட்சியைக் கண்டுகளிக்கும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதொன்றல்ல. கண்ணாரக்கண்டவர்களும், காதாரக்கேட்டவர்களுமன்றி ஏனையோர் அதை ரூபிகரிப்பது துர்லபம். அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய சதுக்கத்தில் வரிசை வரிசையாகத்தோன்றும் தூண்களின் மேல் ஏற்றிவைக்கப்பட்ட அர்ச்சியசிட்டர்களது திருச்சுரூபங்களின்மேல் தங்களை அறியாமலே அவர்களின் பார்வை சென்றது. அவைகள் தங்கள் ஸ்திரமான நிலையைவிட்டு அசைந்தாடுவனபோலத் தோற்றமளித் திருந்தால் அந்தத்தொழிலாளரது ஆனந்த அக்களிப்பின் தன்மையை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

பாப்பரசரின்சொற்பொழிவு எல்லோரும் பாராட்டி வியக்கத்தக்கதொன்று. தங்கள் அன்பையும், பிரமாணிக்கத்தையும், பக்திபற்றுதலையும் காட்ட அவர்கள்வழங்கிய அன்பளிப்புகளுக்காக நன்றிதெரிவித்தார். தேவன்மட்டிலும், அவருடைய பரிசுத்த திருச்சபையின் மட்டிலும் அவர்கள் கொண்டிருந்த அசைக்கமுடியாத ஐக்கியபந்தனத்தை மெச்சினார். விசுவாசிகளின் பொதுப் பிதாவாகிய தமது அன்பும், ஆதரவும், வழிநடாத்துகையும் எப்போதும் அவர்களுக்குக் கிடைக்குமென வாக்களித்தார். நமதுசத்துராதியான நாஸ்திக லோகாயத பொதுவுடைமையினதும், அதன் பல்வேறு தோற்றங்களினதும் கண்ணிக்ளிலிருந்து தப்பிக்கொள்ளுவதற்கு எப்போதும் விழிப்பாயிருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுத்தார். அவர்கள் சங்கத்தின் அங்கத்தினர் தொகை அதிகரித்ததையிட்டும், தேவதொண்டின்மாட்டு அவர்கள் காட்டும் பக்தி வைராக்கியமுள்ள சிரத்தையையிட்டும் அவர்களைப் புகழ்ந்துபோற்றினார்.

பரிசுத்ததந்தை தமது சொற்பொழிவின்போது இருபத்திரண்டுமுறை அவர்களின் பதிலைப் பெறுதற்காகத் தரித்துநிற்க வேண்டியதாயிற்று. ஒவ்வொரு முறையும் அவர்களுடைய ஆனந்த ஆமோதிப்புச் சத்தஇரைச்சல் வானத்தையே கிழித்துவிடும்போல் இருந்தது.

பரிசுத்தபாப்பரசரின் இந்தமகத்துவமான செயலின்பெருக மூர்த்திய "செம்" மேதினம் இனிமேல் எக்காலமும் ஒரு புதிய கீர்த்திபெற்ற "வெண்" மேதின மகோற்சவமாக மாற்றமடையும் என எவரும் கனவிலேதானும் எண்ணியிருக்கவில்லை ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் நசரேத்தூரின் சின்னஞ்சிறிய தொழிற்கூடம் உலகம் முழுவதும் பரந்து மாபெரும் உலக தொழிற்சாலையாக மாற்றமடைந்து காட்சியளிக்கிறதெனக் கூறலாம்.

13-ம் சிங்கராய பாப்பானவர், 11-ம் பத்திநாத பாப்பானவர் "தொழிலாளர் உரிமைகள்"பற்றி விடுத்த திருமுகங்கள் பிரசுரிக்கப்பட்ட நாட்தொட்டு இற்றைவரை அவைகள் அடைந்துள்ள வளர்ச்சியைச் சுருக்கமாக எடுத்தோதினார் நம் பரிசுத்ததந்தை.

இந்தஅபிவிருத்திக்கு முடிசூட்டியதுபோல் தொழிலாளர்விழாவைக் கஷ்டப்பட்டு வேலைசெய்யும் சகலவித தொழிலாளர்களினதும் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் திருநாளை ஏற்படுத்திக் கத்தோலிக்க உலகமெங்கும் வைகாசிமாதம் 1-ந் திகதியன்று இத்திருநாளைக் கொண்டாட வேண்டுமெனக் கட்டளையிட்டார் பரிசுத்த தந்தை 12-ம் பத்திநாதபாப்பானவர்.

தொழிலாளரின் அழியாத ஆத்துமங்களை அவமதிக்கும் — அவர்களின் மனிதத்தன்மையை நிந்தித்துத்தாழ்த்தும் — அவர்களின் சட்டபூர்வமான உரிமைகளை எத்தித் தட்டிப்பறிக்கும் பழிபாவத்துக்கஞ்சாத கெட்ட சத்துருக்களோடு நடத்தும் போராட்டங்களிலே தொழிலாளிகளின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் அவர்கள் மத்தியில் இருந்து அவர்களை நல்வழிப்படுத்தி, ஆன்மசரீரவெற்றிகளை ஈட்டித்தருவாரென்பதற்குச் சந்தேகமேயில்லை.

தொழிலாளியான அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

K. K. J.

# நான் பசியாயிருந்தேன் அப்போது......

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

தாகமாயிருந்தேன், அப்போது பானஞ் செய்யக் கொடுத்தீர்கள். பரதேசியாயிருந்தேன், அப்போது என்னைச் சேர்த்து ஆதரித்தீர்கள். மிகவுஞ்சிறியவர்களாகிய என்சகோதரரான இவர்களில்ஒருவனுக்கு நீங்கள் இவைகளைச் செய்தபோதெல்லாம் எனக்கேசெய்தீர்கள்" என்றுவிளம்பினன். அவன்மறுமொழியாக: "அது திருச்சுவிசேஷத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது; அதைவாசித்தால் அவருக்காகச் சீவிக்கும்வழியை நீ அறிந்துகொள்வாய்" என்றான்.

## சுவிசேஷத்தில் வாசித்தசம்பவம்

இவ்வார்த்தைகள் மாட்டீனின்மனதில் ஆழமாகப்பதிந்தன, தாமதியாது சுவிசேஷப் புத்தகம்ஒன்றை வாங்கி வாசிக்கத்தொடங்கினன். தனதுவேலை முடிந்து இளைப்பாறும்பொழுதும், படுக்கைக்குப்போகும்பொழுதும் நாள்தோறும் அதைவாசித்து வந்தான். அவனுடைய இருதயம் ஞானவெளிச்சம் அடைந்தது. பழையகவலைகளெல்லாம் அவனைவிட்டுப் பரிதிகண்டபனிபோல் மறைந்துபோயின. தன் மகனின் நினைவு வரும்போதெல்லாம் "ஓ தேவனே! உமக்குஸ்தோத்திரம்; உம்முடையசித்தம்நிறைவேறுவதாக" என்று சொல்லுவான். மாட்டீன்கடைத்திவந்த புண்ணியசீவியத்தைக் கண்டோரெல்லாம் அதிசயித்தனர். சுவிசேஷப்புத்தகத்தைவாசிப்பதும், வாசித்த சுகிர்தவாக்கியங்களைத் தியானித்து அவைகளின்படியே சீவிப்பதும் அவனுடைய ஏக கவலையாயிருந்தது. அவ்வாறாக ஒருநாள்இரவு அவன் படுக்கைக்குப் போகும்போது வழமைபோலச் சுவிசேஷப் புத்தகத்தைஎடுத்து, ஐசுவரியனைபரிசேயன் யேசுநாதரைத் தன் வீட்டுக் கழைத்தபோது, பாவியாயிருந்த ஒருமனுஷி அவருடையபாதங்களிலே பரிமளதைலத்தைப்பூசித் தன் கண்ணீர்களால் அவைகளைக் கழுவித் தனதுகூந்தலால் அவைகளைத்துடைத்ததையும், யேசுக்கிறீஸ்துநாதர் அந்த மனுஷியின் பக்கமாகத்திரும்பிச் சீமோனைநோக்கி: "நான்உன்னுடைய வீட்டிற் பிரவேசித்தபொழுது என்னுடைய பாதங்களைக்கழுவ நீ எனக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை; ஆனால், இவள் தன்கண்ணீர்களால் என்னுடைய பாதங்களைக்கழுவித் தன்கூந்தலால் அவைகளைத் துடைத்தாள்; நீ எனக்கு முத்தங்கொடுக்கவில்லை; அவளோ நான்வந்தநேரம்முதல் என்பாதங்களை முத்தமிட்டவண்ணமாய் இருக்கிறாள்" என்னும்வாக்கியங்களை வாசித்துவிட்டு யேசுக்கிறீஸ்துநாதர் என்வீட்டுக்கும் எழுந்தருளுவாரானல் நானும் அவரைக்கண்டுபாவித்து அவரைஉபசரிப்பேனே என்பனவாகச் சிந்தித்துவிட்டு நித்திரையானன்.

## பரி. 12-ம்பத்திநாத பாப்பரசர் சகாயம்

சிலநாட்களின்முன் சந்தை ஒன்றில் எனது துவிச்சக்கரவண்டி காணமற்போய்விட்டது. நான்காலஞ்சென்ற பன்னிரண்டாம்பத்திநாத பாப்பானவரின் உதவியை நாடிச்சென்று எனது துவிச்சக்கரவண்டியை ஒன்பதுநாட்களுள் எனக்குக் காட்டித்தரவேண்டுமென்று உருக்கமாக வேண்டிக்கொண்டேன். சரியாய் எட்டாம்நாள் பொலிஸ்அதிகாரி ஒருவர் எனது துவிச்சக்கரவண்டியுடன் திருடனும் அகப்பட்டுக்கொண்டதாகவும், அத்துவிச்சக்கரவண்டி என்னுடையதுதானேவென்று அடையாளம் கண்டுபிடிக்கும்படியாகவும் என்னிடம்கூறினார். நான் உடனேசென்று அது என்னுடையதுதான் என்பதை நிரூபித்தேன்.

இச்சம்பவம் நிகழ்ந்தநாட்களில் கடுமையான வருத்தங்காரணமாக வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த எனதுமனைவியின் சுகவீனமும் இப்புனித பாப்பானவரின் சலுகையால் நீங்கியது.

எங்களால் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்ட நாய்ஒன்று ஓர்நாள் நச்சுமருந்தொன்றைத் தற்செயலாக உண்டதன் காரணமாகச் சாகுந்தறுவாயிலிருந்தது. அந்நேரமும் இத்தூயவரத்தருடைய சகாயத்தைக் கேட்டுக்கொண்டேன். அடுத்தநாளே நாய்குணமடைந்து முன்போல் ஓடியாடித்திரியக்கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்றோம்.

இன்னும் எத்தனையோ சகாயங்களை இவர்மூலமாகக் கேட்டடைந்திருக்கிறேனதலின் இவருக்கு எனது தாழ்மையான நன்றியையும், வணக்கத்தையும் சமர்ப்பிக்கின்றேன்.

ஆதலால், இதைவாசிக்கும் அன்பர்களும் தங்கள் துன்பதுயரவேளைகளில் இப்புனிதநந்தையைச் சரணடைந்து சகாயம்பெற்றுக்கொள்ளுமாறும், இவருக்குக் கூடியகெதியில் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்படவேண்டுமென்று மன்றாடிக்கொள்ளுமாறும் நேயர்களைப் பரிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பீ. வீ. அ.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். தீத்தம்மாள், அர்ச். திரேசம்மாள் பரி. சதாசகாயஅன்னை, ஆகியோரிடம் நான்இரந்து கேட்டகருமம் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கின்றேன்.

மரியாயின்மகன்

அங்கம்பிட்டி,
தங்கொட்டுவை.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 25-ந்தேதி சனிவாரம் பி. ப. 4மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். பகுதிமுதலாளிமார் சங்கம், பி. ப. 3-30 மணிக்குநடைபெறும்.

A. S. Francis of Mary,
தலைவர்.

சபைக்கர்த்தருக்காக

## யாழ்ப்பாணம் மாநகரசபை ஏலவிற்பனவு

### மோட்டர்லொறி, நம்பர் சிவி 595 (பெட்போர்ட்)

1959-ம்ஆண்டு சித்திரைமாதம் 28-ந்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் மேற்சொல்லப்பட்ட லொறி றாட்லைசென்ஸ் இல்லாமல் யாழ்ப்பாண மாநகரசபைக் கரேச் சில்வைத்துப் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

வாங்குபவர் உடனே முழுத்தொகையையுங்கட்டி லொறியைஎடுக்கவேண்டும்.

லொறியைப் பார்வையிடவிரும்புவோர் மாநகரசபைக் கரேச்சில் அலுவலகவேலை நேரங்களிற் பார்வையிடலாம்.

ஆ. வ. சின்னையா,
மாநகரசபைக்கொமிஷனர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 17-4-59.

## நன்றியறிந்த தோத்திரம்

எனதுஇரண்டாவது குழந்தையாகிய இம்மனுவல்றோச் என்பவர் ஆறுமாதகாலமாய்க் கொடியவயிற்றோட்டத்தினாலும், கடுங்காய்ச்சலாலும், தோஷக்குணங்களினாலும் வருத்தமுற்றிருந்தார். பலவித வைத்தியங்கள் செய்தும் குணமாகவில்லை. கடைசியாக, அர்ச். பத்தாம்பத்திநாதரிடமும், சதாசகாயமாதாவிடமும், பாலைதீவு அர்ச். அந்தோனியாரிடமும் கண்ணீர்விட்டு அழுதுமன்றாடினோம். அம்மன்றாட்டின்பயனாக, குழந்தைக்கு அதிசயவிதமாய்ப் பூரணசுகம் கிடைத்திருக்கிறது. அதற்கத்தாட்சியாக இதைப் பிரசுரிக்கிறேன். இதைவாசிக்கும் விசுவாசிகள் உத்தரிக்கும் ஆத்துமாக்களுக்காக, பர. பிரி. திரி. சொல்வார்களாக!

எஸ். எ. றோச்,
எம். எ. பிகுறுடோ.

## நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்நேதியாவாய்வு, காசம், குன்மம், காயாசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், கெற்பச்சிதைவினால் ஏற்படும்ரோகங்கள் முதலியனவற்றிற்குச் சிகிச்சைபெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

உங்கள் சுகவாழ்வே
எமது சேவையின் இலட்சியம்.




## "இன்னும் கொஞ்சக்காலம்..."

தூத்துக்குடி மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. எம். தயட்டோசியஸ் மாஸ்கறேனஸ்சுவாமியவர்கள் இம்மாதம் 19-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு முகத்துவாரத்திலுள்ள அர்ச். அந்திரேஅப்போஸ்தலர் ஆலயத்தில் காலை 7 மணிக்கு நிறைவேற்றிய திவ்வியபூசைப்பலியிலே மக்களின்சிந்தனை கிளரக்கூடியவகையில் ஒருபசமான பிரசங்கஞ்செய்தார். "இன்னும் கொஞ்சக்காலம்" என்ற அன்றையதின சுவிசேஷவசனங்களை மேற்கோளாகக் கொண்டு, "நமதுஉலகவாழ்வு அற்பஆயுசுபடைத்தது," "பெரும்செல்வம் போக்குகூட்டத்தவைகளாம்அற்று," "உறங்குதல்போலும் சாக்காடு, உறங்கிவிழிப்பதுபோலும் இறப்பு" என்றும், செல்வம், செல்வத்தின்வழியாகிய இன்பம், அவைத்தரும் கருவியாகிய உடல்இத்தனையும் நமதுகொஞ்சக்கால அனுபவம்தான்; எனவே, அர்ச். தோமஸ்மோர் தமதுபுதல்வியையும், என் மனைவியையும்முதலாய்த் தமது விசுவாசத்தில் தளர்ச்சியுறச் செய்ய முயற்சித்தநேரத்திலும் முடிவில்லாத பரலோகவாழ்க்கையை — கேவலம் மீத்திருக்கும் தமதுசொற்பவருடங்கள் எத்தனைபாக்கியங்கள் நிறைந்தனவாயினும் நித்தியத்திற்குமுன் அவைதைப் பணயமாக்கமுடியாதென உறுதியோடு மறுத்ததுபோல் நாமும் பொதுவுடமைக்காரர் வெளிக்கோலனைக் காண்பித்து எவ்விதம்நம்மை ஏமாற்றினாலும் நமது விசுவாசத்திலிருந்து ஒருசிறிதும் விலகக்கூடாதெனச் சொல்லிமுடித்தார்.

சுவாமியவர்கள் 18-ம்திகதிசனிக்கிழமை சாயந்தரம் தமிழ்ப்பங்கினரின் பாவசங்கீர்த்தனம்கேட்டார் தமிழ்ப்பங்கினரின் ஆத்துமஇரட்சணியத்திலும் தாம் கண்ணும்கருத்துமாய் இருக்கிறார்என்பது, இதைஒழுங்குசெய்த பங்குக்குருவர் வண. ஜோண கபஸ்றோசுவாமியவர்களின் ஒவ்வொரு செயலிலுமிருந்து காணமுடிகிறது. சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுதெல்லாம் இப்பங்குக்குருவர் தமிழ்க்குருப்பிரசாதிகளை வரவழைக்கத் தவறுவதில்லை. தமிழ்தெரியாவிட்டாலும் சுவாமியவர்கள் தமிழ்மக்கள்மேல் கொண்டுள்ள அன்பும், ஆதரவும் போற்றத்தக்கன. இவர் பங்கைப் பொறுப்பேற்றபின் தமிழ்ப்பாடசாலை தொடக்கப்பட்டது. இப்பாடசாலை இருநூற்றுக்குமேற்பட்ட மாணவர்களைக்கொண்ட பாடசாலையாய்ச் சிறப்பாகநடைபெறுவதும் ஈண்டுகுறிப்பிடத்தக்கது. இப்பாடசாலை ஆசிரியர்களின் அயாரஉழைப்பையும், பாடசாலையின்வளர்ச்சியில் அவர்கள்கொண்டிருக்கும் ஆர்வத்தையும் குறிப்பிடாமலிருக்க முடியாது.

அரியபிரசங்கம்செய்த வண. மாஸ்கறேனஸ் சுவாமியவர்களுக்கும், பங்குக்குருவருக்கும் பங்கினர்என்றும் நன்றிக்கடனுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

— நிருபர்

## வேண்டுமா?

### சுவிசேஷப் பிரார்த்தனை

இது திருமணித்தியாலத்திற்குகந்தது. சுவிசேஷத்திலடங்கிய அரும்பதவாக்கியங்களைத் தெரிந்தெடுத்துப் பிரார்த்தனைருபமாய்ச் சித்திரித்திருக்கிறது. அத்துடன் திருஇருதய — பரிகாரப் பிரார்த்தனைகளும், பிழைதீர்க்கும்மந்திரம், சின்னச்சிலுவைப்பாதை, இன்னும் சிறுசெபங்களையும்கொண்ட 34 பக்கங்களையுடைய சிறுபுத்தகம்.

பிரதிவிலை சதம் 25.
தபாற்செலவு பிரத்தியேகம்

கிடைக்குமிடம்: S. J. யுவக்கீம்பிள்ளை,
டேவிற்வீதி, யாழ்ப்பாணம்.

## நன்றியறிதல்

பரிசுத்த சதாசகாயமாதாவிடம் நான் இரந்துகேட்டகாரியம் அனுகூலமானது. இதைநேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். அவளின்நாமம் எங்கும் புகழப்படுவதாக.

பாண்டியன்தாழ்வு, அடியான்.

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவும், அவளின் திருக்குமாரனும், பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரும் என்குடும்பத்துக்குப்புரிந்துவந்த பலநன்மைகளுக்காக நன்றிசெலுத்தத் தவறியதற்கு மிகவும் வருந்துகிறேன். தற்போதும் பலஆபத்துக்களிலின்று என்னையும், என்குழந்தைகளையும் பாதுகாத்துவந்தமைக்காக எனது தாழ்ந்தநன்றியைச் செலுத்துவதுடன், அவர்களது வரப்பிரசாதங்கள் இன்னும் எங்கள்மேல் ஏராளமாகப் பொழியப்படுவதாக.

எல். பி. வில்லியம்ஸ்.

## மேலதிகமாக எட்டுஸ்தானங்கள்

திருத்தியமைக்கப் படவிருக்கும் சனப்பிரதிநிதிகள்சபையிலே தமிழ்மக்களுக்கு மேலதிகமாக 8 ஸ்தானங்கள் கொடுபடவேண்டுமென்று சமஷ்டிக் கட்சி தொகுதிநிர்ணயக் கம்மிஷனின் தலைவரைக் கேட்டுக்கொள்ளவிருக்கிறது. வடமாகாணத்துக்குப் 13ஸ்தானங்களும், கிழ்மாகாணத்துக்குப் 11 ஸ்தானங்களுமாக மொத்தம்24ஸ்தானங்கள் கொடுபடவேண்டுமென்பது சமஷ்டிக்கட்சியின்கருத்து. தற்போது வடக்கு — கிழக்குமாகாணங்களுக்கு மொத்தமாகப் 16ஸ்தானங்களே இருக்கின்றன.

ஐக்கிய அராபிய குடியரசின் தலைவரும், எகிப்திய பிரதமருமான நாஸர் சென்ற 16-ந் திகதியன்று நியூயோர்க் நகர பத்திரிகை நிருபருக்கு அளித்த பிரத்தியேக பேட்டிஒன்றிலே, ருஷியா தம்மைப் பதவியிலிருந்து கவிழ்த்துவிடச் சதிசெய்கிறதென்றும், எகிப்தில் கம்யூனிஸ்த அரசாங்கம் ஒன்றை அமைப்பதுதான் ருஷியாவின் சதித்திட்டமென்றும் கூறியிருக்கின்றார்.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 23-1959.